விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii
E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 073 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி 18 வெள்ளிக்கிழமை (01.03.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829


கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## பொலிஸ் அதிகாரங்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து அதிகாரங்களையும் மாகாணங்களுக்கு வழங்கத் தயார் - ரணில்



(கொழும்பு)


பொலிஸ் அதிகாரம் தவிர்ந்த ஏனைய அனைத்து அதிகாரங்களையும் மாகாணங்களுக்கு வழங்கத் தயாராகவுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அதேநேரம், நல்லிணக்கத்தின் ஊடாக நாட்டின் அபிவிருத்தியை அடைவதே அரசாங்கத்தின் நோக்கமாகும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார்.

மேலும்கருத்துரைத்த அவர், இனவாதம் மற்றும் மதவாதத்தை ஒதுக்கிய, உலகின் அனைத்து நாடுகளும் விரைவான அபிவிருத்தியை அடைந்துள்ளது.

இனவாதமும் மத 02

## தமிழரசுக் கட்சியின் நலனுக்காக தலைவர் பதவியை துறந்தார் சிறீதரன்



- தமிழரசுக் கட்சியின் தலைவர் மற்றும் நிர்வாகத் தெரிவு மீண்டும் நடைபெறும்.
- சுமந்திரன் நீதிமன்றில் முன்னிலையாகாததால் வழக்கு ஏப்ரல் 5ஆம் திகதி ஒத்திவைக்கப்பட்டது.

(02ஆம் பக்கம் பார்க்க)


## ரயில் மோதியதில் பெண் உயிரிழப்பு

### வவுனியாவில் சம்பவம்

(வவுனியா)

வவுனியா புளியங்குளம் புதூர் பகுதியில் புகையிரதம் மோதியதில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று மாலை அநுராதபுரத்திலிருந்து காங்கேசன்துறை நோக்கிப் பயணித்த 15



மகனின் (சாந்தன்) வரவை எதிர்பார்த்து தொண்டைமானாறு செல்வச்சந்நிதியானைத் தாயார் வணங்குவதைப் படத்தில் காணலாம். எனினும், சாந்தன் நேற்று முன்தினம் காலை சென்னையில் உள்ள ராஜிவ்காந்தி அரச வைத்தியசாலையில் காலமானமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## சாந்தனின் வித்துடல் இன்று தாயகம் வருகிறது

(யாழ்ப்பாணம்)

சென்னையில் உயிரிழந்த சாந்தனின் வித்துடல் இன்று இலங்கைக்கு கொண்டு வரப்படவுள்ளது.

சாந்தனின் உடலை விமானம் மூலம் இலங்கைக்கு அனுப்புவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என தமிழக அரசுக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதன்படி இன்று காலை 6 மணிக்கு சாந்தனின் சடலம் சென்னை 15

## எனது தாயின் நிலை இனிமேலாவது எந்தத் தாய்க்கும் வராமலிருக்கட்டும்

### சாந்தனின் சகோதரன் உருக்கமான கோரிக்கை

(சென்னை)

எனது தாயின் நிலை இனிமேல் எந்தத் தாய்க்கும் வராமலிருக்கட்டும் என சாந்தனின் சகோதரன் மதிசுதன் தமது சமூகவலைத்தளத்தில் குறிப்பிட்டுள்ளார்.

உயிரிழந்த தமது மூத்த சகோதரன் சாந்தனின் மரணச் செய்தியை தாயாருக்கு தெரிவிப்பதற்கு தமக்கு குறைந்தது இரண்டு நாட்கள் தேவைப்படுவதாகவும், தாயின் மன நிலை குறித்து உருக்கம் வெளியிபிட்டுள்ளார்.

மேலும் தமது வீட்டிற்கு வருபவர்கள் இரண்டு நாட்கள் கழித்து வரு 15

## சாந்தனுக்கு அற்புதம்மாள் அஞ்சலி



15

## தனியார் போக்குவரத்து சேவை வழமைபோல் இன்று நடைபெறும்

### பிரச்சினைகளைத் தீர்க்க குழு நியமிக்க ஏற்பாடு



(யாழ்ப்பாணம்)

பணிப் பகிஷ்கரிப்பை கைவிட்டு இன்று முதல் வழமையான பஸ் சேவையில் ஈடுபட 15

## திலீபன் நினைவேந்தல்

### சிவாஜிலிங்கம் விடுதலை

(யாழ்ப்பாணம்)

திலீபனின் நினைவேந்தலை அனுஷ்டித்தமை தொடர்பாக தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கிலிருந்து முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே. 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மனோ - சம்பிக்க சந்திப்பு கூட்டணி குறித்து ஆராய்வு

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தமிழ் முற்போக்குக் கூட்டணியைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

தமிழ் முற்போக்கு கூட்டணியின் அலுவலகத்தில் இந்த சந்திப்பு இடம் பெற்றுள்ளது.

இந்த சந்திப்பின் பின்னர் பாட்டலி சம்பிக்க ரணவக்க ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நாட்டிற்காக ஒன்றிணை வோம் எனும் மனிதநேய கூட்டணியை அமைப்பது தொடர்பாக நாம் கடந்த வாரம் வேலைத்திட்டமொன்றை ஆரம்பித்திருந்தோம்.

இது தொடர்பாக நாம் பல அரசியல் கட்சி தலைவர்களுடன் கலந்துரையாடி வருகின்றோம்.

அவர்கள் தமது இணக்கப் பாட்டை தெரிவிப்பார்கள் என்ற நம்பிக்கையுள்ளது.

அந்தவகையில் நாம் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலை வர் மனோ கணேசன் உள்ளிட்ட குழுவினரை சந்தித்திருந்தோம்.

நாட்டை நெருக்கடியில் இருந்து விடுவிப்பது தொடர்பாக கலந்து ரையாடினோம்" என பாட்டலி சம்பிக்க ரணவக்க மேலும் குறிப்பிட்டார். (ம-7)

## தலைவர்...

திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில் இலங்கை தமிழ் அரசு கட்சிக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கில், மனுதாரர்கள் கோரும் நிவாரணங்களை வழங்கத் தயாராக இருப்பதாக பிரதிவாதிகள் தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் எம்.ஏ.சுமந்திரனின் நிலைப்பாட்டை அறிவதற்காக ஏப்ரல் 5ஆம் திகதி வரை வழக்கு ஒத்திவைக் கப்பட்டுள்ளது.

கடந்த 21,27ஆம் திகதிகளில் இலங்கை தமிழ் அரசு கட்சியின் நிர்வாக தெரிவுகளை இரத்து செய்யக்கோரி, திருகோணமலையை சேர்ந்த நபர் ஒருவர் திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கில், இடைக் கால கட்டாணை வழங்கப்பட்டிருந்தது.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இதன்போது, மாவை சேனாதிராசா, சி.சிறீதரன், ச.குகதாசன், சீ.யோகேஸ்வரன் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணிகள் கே.வி.தவராசா, புவிதரன் ஆகியோர் முன்னிலையாகியிருந்தனர்.

இந்த வழக்கில் வழங்கப்பட்ட கட்டாணையை நீடிக்க வேண்டுமென வழக்காளி சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி ஜெப்ரி அழகரட்ணம் கோரினார்.

இதற்கு பதிலளித்த பிரதிவாதிகள் தரப்பு சட்டத்தரணி கே.வி.தவராசா- இது சாதாரண எல்லை, காணி பங்கீட்டு வழக்கல்ல. ஒரு இனத்துடன் தொடர்புடைய, பாரம்பரிய கட்சியுடன் தொடர்புடைய வழக்கு, இந்த வழக்கை தொடர்ந்து நீடிக்க- தொடர்ந்து நடத்த நாம் தயாரில்லை. இதனால் இனநலனில் அடிப்படையில் வழக்கை முடித்து, கட்சியை இயங்க செய்வதற்காக சில விட்டுக்கொடுப்புக்களை செய்யவும் தயாராக இருக்கிறோம். வழக்காளிகள் கோரும் நிவாரணங்களை நாம் வழங்க தயாராக இருக்கிறோம்.

தமிழ் அரசு கட்சியின் தலைவர் பதவிக்கான போட்டி நடந்ததாலேயே இந்த நிலைமை வந்தது. சிறீதரன் வெற்றி பெற்றிருக்காவிட்டால் இந்த வழக்கே வந்திருக்காது. ஆனால் சிறீதரன் பெரும்பான்மையான வாக்குகளால் வென்றார். அவர் அந்த வெற்றியையும் துறந்து, கட்சியை மீள இயங்கச் செய்ய விரும்புகிறார். அதனால் தலைவர் தெரிவையும் மீள நடத்த தயாராக இருக்கிறோம் என்றார்.

முன்னதாக, கட்சி மட்ட ஆலோசனையில், இந்த நிலைப்பாட்டிலேயே அனைவரும் இருப்பது என தீர்மானிக்கப்பட்டது. ஏனெனில் ஆட்சேபணை தெரிவிக்க முற்பட்டால் வழக்கு நீண்டு செல்லும் என்பதால் அந்த தீர்மானம் எடுக்கப்பட்டது. அதற்கு சம்மதித்த பதில் செயலாளர் ப.சத்தியலிங்கம், குலநாயகம் ஆகியோர் நேற்று மாறுபட்ட நிலைப்பாட்டை எடுக்க முற்பட்டனர்.

அவர்கள் சார்பில் எழுந்த சட்டத்தரணியொருவர், அவர்கள் ஆட்சேபனை தாக்கல் செய்யவுள்ளனர், அதற்கு திகதி குறிப்பிடும்படி கேட்டனர்.

இதை சட்டத்தரணி கே.வி.தவராசா ஆட்சேபித்தார். அவர்கள் இருவரும் இந்த மன்றிலேயே இருப்பதால் அவர்களின் நிலைப்பாட்டை நேரில் கேட்க வேண்டுமென்றார். இதற்கு அவர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி ஆட்சேபனை தெரிவித்தார்.

எனினும், இது கட்சி சார்ந்த வழக்கு, அனைவரும் கட்சி பிரமுகர்கள், கட்சி தீர்மானமும் இதில் தொடர்புபட்டுள்ளது என கே.வி.தவராசா சுட்டிக்காட்டியதையடுத்து, அவர்களின் நிலைப்பாட்டை கேட்க நீதிமன்றம் சம்மதித்தது.

இருவரையும் அழைத்த நீதிமன்றம், அவர்களின் நிலைப்பாட்டை கேட்டது.

அவர்களும் தமக்கு ஆட்சேபனையில்லையென்றனர்.

இந்த வழக்கில் 7 பிரதிவாதிகள். அதிலொருவரான எம்.ஏ.சுமந்திரன் நேற்று மன்றில் முன்னிலையாகவில்லை. (அவரது தாயாரின் இறுதி நிகழ்வுகள் நடந்து கொண்டிருப்பதால்). அவரது நிலைப்பாட்டை அறிய ஏப்ரல் 5ஆம்திகதிக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

அவரும், ஆட்சேபனையில்லையென குறிப்பிட்டால், வழக்கு சுமுகமாக முடியும். அவர் எடுக்கும் முடிவில், இந்த வழக்கின் பின்னணி என்னவென்பது வெளிப்படும்

மேலும், இலங்கை தமிழரசு கட்சியின் தேசிய மாநாட்டுக்கு எதிராக பீற்றர் இளஞ்செழியனால் தாக்கல் செய்த வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

யாழ். நீதவான் நீதிமன்றத்தில் நேற்று இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது. இதையடுத்து எதிர்வரும் ஏப்ரல் 25ஆம் திகதி வரை வழக்கு ஒத்திவைக் கப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசியமாநாடு கடந்த 19 ஆம் திகதி நடைபெறும் என்று கூறப்பட்டிருந்த நிலையில், அதற்குத் தடை விதிக்கக்கோரி யாழ்ப்பாணத்திலும், திருகோணமலையிலும் இருவேறு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

இந்நிலையில், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நிர்வாகத் தெரிவில் கட்சிக்குள் ஏற்பட்ட முரண்பாடுகளின் தொடர்ச்சியாகவே இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. (ம-7)

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம் 31 . 12 . 1942

மறைவு 01 . 02 . 2024

கடந்த 01.02.2024 அன்று இறைபதமடைந்த எமது குடும்ப விளக்கு

அமரர்

## வள்ளிநாயகி கந்தசாமித்துரை

(கிண்ணியம்மா)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 02.03.2024 சனிக்கிழமை அதிகாலை 5.00 மணியளவில் வல்வெட்டித்துறை ஊறணி தீர்த்தக்கரையில் இடம்பெறும். அதனைத் தொடர்ந்து அன்னாரது இல்லத்தில் மு.ப 10.00 மணியளவில் இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

அருமை (மகன்) - 077 841 4450

ஈசன் (மகன்) - 071 321 6996

(19315)

இங்ஙனம்:

## ஏனைய அனை...

வாதமும் அரசியல்வாதிகளுக்கு அதிகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கும் மதத் தலைவர்கள் தமது பதவிகளில் நீடிப்பதற்கும் குறுகிய வழியாக மாறியுள்ளதை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, நீண்ட கால கசப்பான அனுபவமானது நாட்டைப் பயங்கரமான போருக்கு இழுத்துச் சென்றதையும் நினைவு கூர்ந்துள்ளார்.

எனவே நாட்டில் நல்லிணக்கத்தையும் மத நல்லிணக்கத்தையும் கட்டியெழுப்புவதற்கு அனைவரும் ஒன்றிணைய வேண்டும்

அதற்காக அரசாங்கம் பல சாதகமான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

மதத்திற்கும் நல்லிணக்கத்திற்கும் உள்ள தொடர்பை நாங்கள் நன்கு அறிவோம்.

எங்களுக்கு இனவாதம் மற்றும் மதவாதம் பற்றிய அனுபவம் உள்ளது. இதன் விளைவாக, நாங்கள் ஒரு பயங்கரமான போரை எதிர்கொண்டோம்.

யுத்தம் முடிவடைந்த பின்னர் சகவாழ்வு தொடர்பில் எமது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதில் அனைத்து மதத் தலைவர்களுக்கும் பாரிய பொறுப்பு உள்ளது.

சிங்கப்பூரில் இனவாதமோ மதவாதமோ இல்லை. பல மொழிகள் பேசுவோர் இருந்தாலும், சிங்கப்பூர் இன்று துரித வளர்ச்சியை அடைந்துள்ளது.

கடந்த ஆண்டு இறுதியில் பல பௌத்த மதத் தலைவர்கள் மற்றும் தமிழ் தலைவர்கள் இமயமலைப் பிரகடனத்தை கையளித்தனர்.

அந்த அறிக்கையின் பிரகாரம் செயற்பட்டு வருகிறோம். தற்போது நல்லிணக்கத்தை உருவாக்குவதற்கான கடைசிப் பகுதியில் இருக்கிறோம்.

குறிப்பாக தமிழ் அரசியல் கட்சிகள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் இது குறித்து ஆலோசித்து வருகிறோம்.

எஞ்சியுள்ள பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும்.

காணிப் பிரச்சினையைத் தீர்ப்பது குறித்து கவனம் செலுத்தியுள்ளோம்.

அனைத்துத் தரப்பினரையும் அழைத்து, இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வைத் தேட எதிர்பார்க்கிறோம்.

1985 வரைவின்படி செயற்படுமாறு அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளேன்.

அத்துடன், அடுத்த வாரம் பாராளுமன்றத்தில் தமிழ் கட்சிப் பிரதிநிகளைச் சந்தித்து இது குறித்து கலந்துரையாடவுள்ளேன்.

பாதுகாப்புத் தரப்பினருடன் கலந்துரையாடியதன் பின்னர் மேலும் பல காணிகளை விடுவிக்க இணக்கம் தெரிவித்துள்ளனர்.

இதே முறையில் முன்னோக்கிச் செல்ல முடியும். அதிகாரப் பகிர்வின் 3ஆவது பட்டியலின் அதிகாரங்களை வழங்குவதே இங்கு முதன்மையான கோரிக்கையாகும்.

பொலிஸாரின் அதிகாரத்தில் நாம் தலையிடப் போவதில்லை. அதனைப் பின்னர் பார்க்கலாம்.

காணிச் சட்டத்தை சமர்பிக்க வேண்டும். மேலும், 3ஆவது பட்டியலில் உள்ள ஏனைய விடயங்களை வழங்குவதில் எமக்கு எவ்வித பிரச்சினையும் இல்லை.

அதற்காக ஏனைய கட்சிகளுடன் கலந்துரையாடி மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெறுவதற்கு பாராளுமன்றில் கட்சிகளுடன் இணக்கம் எட்டப்பட்டு வருவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எச்.ஐ.வி தொற்றால் பாதிக்கப்பட்டோர்
# 14.3 சதவீதமாக அதிகரிப்பு

## தேசிய பாலியல் நோய் மற்றும் எயிட்ஸ் திட்டப் பணிப்பாளர் அதிர்ச்சித் தகவல்

**(கொழும்பு)**
**"கடந்த 2022 ஆம் ஆண்டை விட 2023 ஆம் ஆண்டில் எச்.ஐ.வி தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 14.3 சதவீதமாக அதிகரித்துள்ளதாக" தேசிய பாலியல் நோய் மற்றும் எயிட்ஸ் தடுப்பு திட்டத்தின் பணிப்பாளர் சமூக மருத்துவ நிபுணர் ஜானகி விதான பத்திரன தெரிவித்துள்ளார்.**

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் "கடந்த ஆண்டு 694 புதிய எச்.ஐ.வி நோயாளிகள் கண்டறியப்பட்டுள்ளனர். அவர்களில் பெரும்பாலானவர்கள் ஆண்களாவர்.

இதன்படி 611 ஆண்கள் புதிதாக தொற்றுக்குள்ளானவர்களாக இனங்காணப்பட்டுள்ளனர். இது 88 வீதமாகும். மேலும் இந்த காலப்பகுதியில், 81 பெண்கள் புதிதாக எச்.ஐ.வி நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதன்படி, சமூகத்தில் எச்.ஐ.வி தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை சுமார் 4,100 என மதிப்பிடப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (நி-5)

# இலங்கை வந்துள்ள இந்தியக் கப்பல்கள்

(கொழும்பு)
இந்தியாவின் இரண்டு கரையோர பாதுகாப்பு கப்பல்கள் காலி மற்றும் கொழும்பு துறைமுகங்களுக்கு சுற்றுலா மேற்கொள்வதற்காக வந்துள்ளதாக இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது.

இந்தியாவின் கரையோர பாதுகாப்பு படைப் பிரிவிற்கு சொந்தமான சமர்த் எனும் கடல்சார் கண்காணிப்பு கப்பலும், அபினவ் எனப்படும் அதிவேக கண்காணிப்பு கப்பலும் வருகை தந்துள்ளன. (நி-5-6)

## அஸ்வெசும கொடுப்பனவு
# மோசடி செய்து பணம் பெற்ற 7 ஆயிரம் குடும்பங்கள்
## சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்த முடிவு

(கொழும்பு)
அஸ்வெசும திட்டத்திறகாக புதிதாக தகுதி பெறும் 24 இலட்சம் குடும்பங்களுக்கும் ஜூன் மாதம் முதல் கொடுப்பனவுகளை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேதமசிங்க தெரிவித்துள்ளார்.

2024 ஆம் ஆண்டுக்கான அஸ்வெசும கொடுப்பனவிற்காக 205 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இதனிடையே பொய்யான தகவல்களின் மூலம் அஸ்வெசும நன்மைகளைப் பெற்ற சுமார் 7000 பேர் அதிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அவ்வாறான நபர்களிடமிருந்து பணத்தை மீளப் பெறவும் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க மேலும் தெரிவித்துள்ளார். (நி-5)

# ஆராய்ச்சிக் கப்பல்களுக்கு தடை விதித்த இலங்கை
## அதிருப்தி வெளியிட்ட சீனா

(கொழும்பு)
ஆராய்ச்சி கப்பல்களுக்கு இலங்கை தடை விதித்துள்ளமை குறித்து சீனா தனது கடும் அதிருப்தியை வெளியிட்டுள்ளது.

கடந்த ஜனவரி மூன்றாம் திகதி முதல் சீன ஆராய்ச்சிக் கப்பல்கள் இலங்கையின் விசேட பொருளாதார வலயத்தில் ஆராய்ச்சியில் ஈடுபடுவதற்கு தடை விதித்துள்ளமை குறித்தே சீனா தனது அதிருப்தியை வெளியிட்டுள்ளது.

வெளிநாட்டு ஆராய்ச்சிக் கப்பல்கள் இவ்வாறான ஆராய்ச்சிகளில் ஈடுபடுவதற்கு இலங்கை ஒரு வருடகால தடையை விதித்துள்ளது.

சீனாவின் ஜியாங்யாங் கொங் 3 என்ற ஆராய்ச்சி கப்பல் தென் இந்திய கடற்பரப்பில் ஆராய்ச்சியில் ஈடுபடுவதற்கு திட்டமிட்டிருந்த நிலையிலேயே இலங்கை இந்த தடையை அறிவித்தது.

குறிப்பிட்ட கப்பல் சீனாவின் இயற்கை வள அமைச்சிற்கு உரியது என தகவல்கள் வெளியாகியுள்ளன.

தனது அயலில் ஆராய்ச்சிகள் இடம்பெறுவது குறித்த பாதுகாப்பு கரிசனையை இந்தியா வெளியிட்ட நிலையிலேயே இலங்கை இந்த தடையை விதித்திருந்தது.

எனினும் சீன அதிகாரிகள் இலங்கையின் இந்த முடிவால் கடும் அதிருப்தி வெளியிட்டுள்ளனர். (நி-5-6)

# சாந்தன் மரணம் இயற்கையானது அல்ல
# அது திட்டமிட்ட படுகொலை
## சட்டத்தரணி புகழேந்தி அதிர்ச்சித் தகவல்



(சென்னை)
சாந்தன் உயிரிழந்த விவகாரமானது இயற்கை மரணமல்ல எனவும் அது இந்திய அரசினால் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட படுகொலை எனவும் சட்டத்தரணி புகழேந்தி அதிர்ச்சித் தகவலை வெளியிட்டுள்ளார்.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை விதிக்கப்பட்டு பின் சிறையிலிருந்து விடுதலையான சாந்தன் சென்னை ராஜீவ் காந்தி மருத்துவமனையில் நேற்று முன்தினம் உயிரிழந்தார்.

இந்நிலையில் சாந்தனின் மரணம் தொடர்பில் கருத்து தெரிவித்துள்ள சட்டத்தரணி புகழேந்தி "ஈழத்தமிழருக்கு எதிராக இந்தியாவில் காணப்படும் திருச்சி சிறப்பு முகாம் என்பது இழுத்து மூடப்பட வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் சாந்தன் விட்டுச் சென்றுள்ள இந்த செய்தியானது உலகத்தில் கொடுமைகளை அனுபவிக்கும் ஈழத் தமிழர்கள் அனைவருக்கும் ஒரு பாடமாக மாறியுள்ளது.

இந்நிலையில் இலங்கை அரசு அனுமதி வழங்கியும் கூட இந்திய அரசினால் சாந் தன் தனது தாய்நாட்டுக்கு அனுப்பப்படாமல் மரணித்த சம்பவம் மிகவும் வேதனைக்குரியது." எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-5)

# காணாமற்போனோர் பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது
## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)
காணாமற்போனோர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. அது தொடர்பில் எதிர்வரும் காலங்களில் அறிவிப்போம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கை தேசிய சமாதானப் பேரவையின் ஏற்பாட்டில் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நல்லிணக்கத்துக்கான மதங்கள் தேசிய சர்வமத மாநாட்டில் உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்தார்

அத்துடன் இது தொடர்பாக சிறையில் இருந்த சிலரை விடுவிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விக்ரம்- ராஜன் -கங்கு வெற்றிக்கிண்ணம்
## பிளைஓப் சுற்றுக்குத் தகுதியான கிறஸ் கொப்பர்ஸ்



விக்ரம்-ராஜன்-கங்கு வெற்றிக்கிண்ணம் 4 ஆவது தகுதிகாண் போட்டியில் கிறஸ் கொப்பர்ஸ் அணி, கே.சி.சி.சி அணியை 7 ஓட்டங்களால் வெற்றி பெற்று தமது 2 ஆவது வெற்றியை பதிவு செய்துள்ளதுடன் பிளை ஓவ் சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளது.


குறித்த தகுதிகாண் போட்டியில் கிறஸ் கொப்பர்ஸ் கே.சி.சி.சி அணிகள் மோதின. கிறஸ்கொப்பர்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடிய போது 28.4 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 127 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

அஜித்-40, ஜனன்தன்- 31 ஓட்டங்களை பெற்றதோடு பந்து வீச்சில் கே.சி.சி.சி அணியை சார்ந்த கஜானன் 15 ஓட்டங்களை கொடுத்து 5 இலக்குகளையும் துஷ்யந்தன் 16 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு இலக்கினையும் கைப்பற்றினர்.

128 ஓட்டங்களை வெற்றி இல க்காகக் கொண்டு களமிறங்கிய கே.சி.சி.சி அணி 29.4 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 120 ஓட்ட ங்களை பெற்றது.

நிமலதாஸ் 23 ஓட் டங்களையும், ஜெயரூபன் சத்யன் ஆகி யோர் தலா 16 ஓட்டங்களைக் பெற்றதோடு பந்து வீச்சில் அஜித் 17 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்கினையும் மதூஸன் 18 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக் கினையும் துளசிகன் 28 ஓட்டங் களைக் கொடுத்து 2 இலக்கினையும் கைப்பற்றினர்.

இப் போட்டியில் வெற்றி பெற்ற கிறஸ் கொப்பர்ஸ் அணி, நாளை காலை நடைபெற இருக்கும் முதலாவது தகுதி சுற்று போட்டி 1 இல் கலந்து கொள்ள வுள்ளது. இப் போட்டியில் சிறந்த வீரராக கிறஸ் கொப்பர்ஸ் அணியை சார்ந்த அஜித் தெரிவானார். (நி-5-6)



அஜித் (சிறந்த வீரர்)

---

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3053

### தயா


சம்பள உயர்வு உண்டா சாமி?



அதுவா, ஜால்ரா அடிக்கிறவனுக்கும் காக்கா பிடிக்கிறவனுக்கும் போட்டு கொடுக்கிறவனுக்கும் தாம்மா தாராங்க.

### தீபன்


வீட்டில வேலையெல்லாம் நல்லா பார்ப்பியா?



ம் பார்ப்பேன் அத்தை. உங்க பையன் வேலை செய்யும் போது பக்கத்தில் இருந்து நல்லா பார்ப்பேன் அத்தை.

### வருண்

யாரு கூட வாச்சும் பிரச்சினை வரும் போது கம்முன்னு இருந்துட்டு



பிரச்சினை எல்லாம் முடிஞ்சு தூங்கப் போறப்போ நல்ல லட்டு லட்டு பொயின்ஸ் எல்லாம் எடுத்துக் கொடு.

### பிரியா

மச்சி காதலுக்கும் கல்யாணத்துக்கும் என்ன வித்தியாசம்?



அடிமை மாதிரி வாழ்றது -காதல் வாழ்க்கை. அடிமையாகவே வாழ்றது -கல்யாண வாழ்க்கை.

### பாசினி




### ஜானுகா

சீக்கிரமாக பில்கேட்ஸ் ஆகனும் என்று கனவு கண்டால்...



சீக்கிரமா பில் கட்டு என்று கஸ்டமர்கேர்ல இருந்து கோல் வருது.

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



யாழ்-கிளிநொச்சி மாவட்ட பாராளுமன்ற
உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி
M.A.சுமந்திரன் அவர்களின் அன்புத்தாயார்
அமரர். திருமதி.

**கிளேடிஸ் புஸ்பராணி
மதியாபரணன்**

அவர்கள் இறைபதம் எய்தியதை அறிந்து
துயரடைகின்றோம் அன்னாரின்
இழப்பினால் துயருறும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

(C-8440)

**இல.568, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.**

**பிரிவுத்துயருடன்
யாழகம் Sports.**

# மரண அறிவித்தல்

## அமரர். தேவராசா மகேஸ்வரி



**பிறப்பு: 12.11.1960**

**இறப்பு: 28.02.2024**

மொந்திபுலம் காரைநகரை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தேவராசா மகேஸ்வரி அவர்கள் 28.02.2024 புதன்கிழமை காலமானார். அன்னார் அமரர்களான கொத்தன், பூரணம் தம்பதிகளின் பாசமிகு மகளும், அமரர்களான ஐயம்பிள்ளை, சரஸ்வதி தம்பதிகளின் பாசமிகு மருமகளும் தேவராசா அவர்களின் அன்பு மனைவியும் சோமஸ்கந்தசாமி, சிவபாலன் அவர்களின் அன்புச் சகோதரியும் செந்தூரன் (ஜேர்மன்), பிரதீபன் (ஜேர்மன்) அவர்களின் அன்புத் தாயாரும் சனா(ஜேர்மன்), சர்மிலா அவர்களின் அன்பு மாமியாரும் இலியாஸ், அபினாஸ், பவித்திரா, வைஸ்ணவி, அபினாத் அவர்களின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார். அன்னாரது இறுதிக்கிரியைகள் 01.03.2024 இன்று மு.ப10.00மணிக்கு சாம்பலோடை இந்து மயானத்தில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**மொந்திபுலம்,
காரைநகர்.**

(9309)

**தகவல்:
குடும்பத்தினர்.**

# ஆதனப்பெயர் மாற்றம்

யாழ். மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் - 06, ஆள்காட்டி வளவு ஒழுங்கை, 11 ஆம் ஆதன இலக்கத்தைக் கொண்ட ஆதனம் சொந்தக்காரர் என்ற பெயரில் யாழ். மாநகரசபை ஆதனப்பதிவேட்டில் காணப்படுகின்றது.

இதன் கீழ் அட்டவணையில் நன்கு விபரிக்கப்படும் ஆதனம் இளையதம்பி குமாரசுவாமியும் பெண் இராசம்மாவும் 01.07.1962ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு கந்தையா தில்லையம்பலம் முகதாவில் 1950ஆம் இலக்கத்தில் நிறைவேறிய சீதன உறுதி மூலம் காசிப்பிள்ளை சவுந்தரராசா பெண் உருத்திரா தேவி என்பவரிற்கு சீதனமாக வழங்கியுள்ளனர்.

பின்னர் குறித்த ஆதனத்தை காசிப்பிள்ளை சவுந்தரராசாவும் பெண் உருத்திரா தேவியும் 13.08.2018ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு லிங்கா துரைராஜா முகதாவில் 10836ஆம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதி மூலம் மகாதேவன் கிருஷ்ணமோகனிற்கும் கிருஷ்ணமோகன் பெண் தனுஷாவிற்கும் கனகலிங்கம் நரசிம்மனிற்கும் நரசிம்மன் பெண் அனுஷாவிற்கும் நன்கொடையாக வழங்கியுள்ளனர்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி, சுண்டிக்குளி கோவிற்பற்று, சிவியாதெரு இறை: "பிராயன் தாழ்வு வளவு" நிலப்பரப்பு (4,1/2) இது நில அளவையாளர் P.தனராசாவின் 2838A படத்தில் லொட் 1 என காட்டப்பட்டுள்ளது. இந்த நிலப்பரப்பு நான்கு குளி ஒன்பதிற்கும் எல்லை.

கிழக்கு : தனியார் ஒழுங்கை.
வடக்கு : யோகேஸ்வரன் பெண் தில்லைநாயகியின் ஆதனமும் பத்மநாதன் பெண் கமலாதேவியின் ஆதனமும்.
மேற்கு : கிருஷ்ணபிள்ளை பெண் யசோவின் ஆதனம்.
தெற்கு: ஆள்காட்டி ஒழுங்கை
இதடங்கலும்.

கிராம சேவையாளர் பிரிவு : J/96
பிரதேச செயலர் பிரிவு : நல்லூர்
பிரதேசசபை: யாழ். மாநகரசபை

தற்போது மகாதேவன் கிருஷ்ணமோகனும் கிருஷ்ணமோகன் பெண் தனுஷாவும் கனகலிங்கம் நரசிம்மனும் நரசிம்மன் பெண் அனுஷாவும் இவ்வாதனத்தை தமது பெயர்களினை எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு தமது தத்துவகாரரான காசிப்பிள்ளை சவுந்தரராசா மூலம் விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் ஒரு பகுதிக்கு/ முழுவதற்கும் உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது மகாதேவன் கிருஷ்ணமோகனும் கிருஷ்ணமோகன் பெண் தனுஷாவும் கனகலிங்கம் நரசிம்மனும் நரசிம்மன் பெண் அனுஷாவும் எனும் பெயர்களிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் இவ்வாதனம் பெயர்மாற்றம் செய்வதால் எழக்கூடிய எப்பிரச்சினைகளுக்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ஆணையாளர்,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.**

(சி-8437)

# இராசிபலன்

**01.03.2024**
**மாசி 18, வெள்ளிக்கிழமை**
**சஷ்டி பின்னிரவு 4.13 மணிவரை**
**சுவாதி முற்பகல் 9.59 மணிவரை**
**சுபநேரம் 6.27-7.57 மணிவரை**
**இராகுகாலம் 10.57-12.27 மணிவரை**
**சந்திராஷ்டமம்: ரேவதி**

**வளவன்**




சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், போசன சுகமுண்டு.




கடன் சுமை குறைய வழிவகை செய்வீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு, முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், வழிபாட்டில் ஆர்வம் கூடும்.




சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.




பெற்றோர் மீது பிரியம் கூடும், நம்பிக்கைகள் நடைபெற தும்பிக்கையானை வழிபட வேண்டிய நாள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.




உறவினர்கள் நண்பர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், வெற்றிகள் குவிய விநாயகப் பெருமானை வழிபட வேண்டிய நாள்.




செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள், வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள், உடல் நலன் சீராக உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள்.




வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், செலவிற்கேற்ப வருமானம் வந்து சேரலாம்.




பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வழிபாட்டல் மகத்துவம் காண வேண்டிய நாள், பயணங்களால் பலனுண்டு, சுப விரயங்கள் கூடும் நாள்.




அதிர்ஷ்ட வாய்ப்புகள் உங்களை நாடி வரலாம், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.




பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், கனவுகள் நனவாக கற்பக மூர்த்தியை வழிபட வேண்டிய நாள், பூர்வீக சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு.




தொழிலில் அதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள், வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.




தேவையற்ற விரயங்கள் மேலோங்கும் நாள், கவலைகள் தீர கணதியை வழிபட வேண்டிய நாள், எடுத்த காரியங்களில் சிறு தடை தாமதமங்கள் ஏற்படலாம்.

**எதிலும் போட்டி இருந்தால்தான் விரைவில் வளர்ச்சி அடைய முடியும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருந்துவில்லைகள் மீட்பு



(மன்னார்)

இலங்கை கடற்படை, பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் இணைந்து நேற்று மேற்கொண்ட நடவடிக்கையின் போது, மன்னார் இலுப்பைக்கடவை தடாகத்தில் புதர்களுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த 53, ஆயிரம் மருந்து வில்லைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இதன் போது மீடகப்பட்ட போதை மாத்திரைகள் சட்ட நடவடிக்கைகளுக்காக இலுப்பைக்கடவை பொலிஸ் விசேட அதிரடிப்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (நி-5-6-285)

# யாழ். பேருந்து நிலையத்தை முற்றுகையிட்ட தனியார் பேருந்து உரிமையாளர்கள்

(யாழ்ப்பாணம்)

**யாழ்.மத்திய பேருந்து நிலையத்தை முற்றுகையிட்டு தனியார் போக்குவரத்து உரிமையாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.**





பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டுவரும் தனியார் பேருந்து உரிமையாளர்கள் நேற்றுக் காலை யாழ்.மத்திய பேருந்து நிலையத்தை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இதனால் இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்துகள் சேவையில் ஈடுபட முடியாத நிலை ஏற்பட்டதோடு சிறிது நேரம் ஆஸ்பத்திரி வீதியின் போக்குவரத்தும் தடைப்பட்டிருந்தது.

சம்பவ இடத்திற்கு வருகை தந்த வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், இலங்கை போக்குவரத்து சபையினர் மற்றும் தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தினருடன் கலந்துரையாடி உரிய தீர்வினை பெற்றுத்தருவதாக உறுதி வழங்கினார்.

ஆளுநரின் வாக்குறுதியை அடுத்து முற்றுகைப் போராட்டத்தை கைவிட்ட தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தினர் தொடர்ந்து பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டுவருவதால் பயணிகள் தொடர்ந்தும் அசௌகரியங்களுக்கு உள்ளாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6-30-33)

## திருக்கேதீஸ்வர சிவராத்திரி நிகழ்வின் முன் ஆயத்த நடவடிக்கைகள்

(மன்னார்)

மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தின் மகா சிவராத்திரி நிகழ்வின் முன் ஆயத்த நடவடிக்கை தொடர்பான இறுதி கலந்துரையாடல் நேற்று வியாழக்கிழமை திருக்கேதீஸ்வர ஆலயத்தில் மன்னார் மாவட்ட உதவி அரசாங்க அதிபர் பரந்தாமன் தலைமையில் இடம்பெற்றது.

இக் கலந்துரையாடலின் போது மார்ச் 8 ஆம் திகதி மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தில் இடம்பெற உள்ள மகா சிவராத்திரி நிகழ்வு தொடர்பாகவும் முன்னெடுக்கப்பட வேண்டிய முன் ஆயத்த நடவடிக்கைகளில் குறிப்பாக போக்குவரத்து, சுகாதாரம்,குடிநீர், உணவு தங்குமிட ஏற்பாடுகள், பாதுகாப்பு உள்ளடங்களாக முன்னெடுக்க வேண்டிய அவசிய நடவடிக்கைகள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது.

குறித்த கலந்துரையாடலில் திருக்கேதீஸ்வர ஆலயத்தின் தலைவர் ராமகிருஷ்ணன், திணைக்கள தலைவர்கள், ஆலய பரிபாலன சபை உறுப்பினர்கள், இராணுவம்,பொலிஸ் உயர் அதிகாரிகள்,சுகாதார வைத்திய அதிகாரிகள் உள்ளடங்களாக பலர் கலந்து கொண்டிருந்தனர். (நி-5-6-285)

## சிறுமி கொலை விவகாரம்; கைதானவர் மறியலில்

(மன்னார்)

தலைமன்னார் ஊர் மனை கிராமத்தில் 10 வயது சிறுமி ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட நபரை மீண்டும் எதிர்வரும் 7 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க மன்னார் நீதிவான் கே.எல். எம்.சாஜீத் நேற்று உத்தரவிட்டார். (நி-5-6-285)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 160 | 200 | 200 | 200 |
| உருளைக்கிழங்கு | 160 | 170 | 160 | 140 | 180 |
| பச்சைமிளகாய் | 400 | 400 | 400 | 385 | 500 |
| தக்காளி | 300 | 350 | 300 | 380 | 500 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 140 | 80 | 150 | 150 |
| கோவா | 350 | 420 | 350 | 300 | 500 |
| கரட் | 600 | 550 | 520 | 500 | 600 |
| பூசணி | 200 | 260 | 170 | 160 | 300 |
| புடோல் | 150 | 200 | 150 | 130 | 250 |
| வாழைக்காய் | 200 | 250 | 130 | 150 | 250 |
| சின்ன வெங்காயம் | 250 | 360 | 220 | 325 | 250 |
| பெரிய வெங்காயம் | 400 | 400 | 380 | 350 | 450 |
| பாகற்காய் | 350 | 380 | 350 | 300 | 400 |
| வெண்டக்காய் | 250 | 250 | 150 | 130 | 400 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 120 | 100 | 150 |
| பயற்றங்காய் | 200 | 250 | 200 | 265 | 400 |
| லீக்ஸ் | 300 | 400 | 350 | 300 | 500 |
| பீற்றூட் | 350 | 350 | 350 | 250 | 350 |
| கறிமிளகாய் | 450 | 600 | 400 | 365 | 500 |
| முருங்கைக்காய் | 1800 | 1400 | 800 | 1610 | 1200 |
| போஞ்சி | 300 | 300 | 400 | 250 | 500 |
| கத்தரிதம்புள்ள | 150 | 120 | 150 | -- | 180 |
| கீரை - 1 பிடி | 80 | 100 | 40 | 50 | 100 |
| தேசிக்காய் | 150 | 300 | 120 | 120 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 110 | 110 | 80-120 | 70-100 |
| இராசவள்ளி | 320 | 400 | 300 | 350 | 300 |
| வெங்காயப்பூ | 150 | 200 | 150 | 100 | 300 |
| முள்ளங்கி | 80 | 150 | 80 | 140 | 150 |
| பொன்னாங்காணி | 80 | 120 | 80 | 120 | 80 |
| [illegible] | 60 | 50 | 50 | 80 | 60 |
| [illegible] | 80 | 150 | 70 | 100 | 250 |

## சர்வதேச ஓசைப்பந்து கிரிக்கெட் யாழிலிருந்து கதீசன் பங்கேற்பு

(யாழ்ப்பாணம்)

பார்வையற்றோருக்கான சர்வதேச ஓசைப்பந்து தடுப்பாட்டப் போட்டியில் இலங்கை அணியை பிரதிநிதித்துவப் படுத்தி விளையாடுவதற்காக யாழ்.விழிப்புலனற்றோர் சங்க அங்கத்தவரான காந்தன் கதீசன் தெரிவாகியுள்ளார்.

துபாயில் பாகிஸ்தானை எதிர்த்து இலங்கை அணி அணி மையில் விளையாடியிருந்த போட்டியில் இவர் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.(நி-5-6)



யாழ்.பிராந்திய பொலிஸ், சிறுவர் மற்றும் பெண்கள் தடுப்பு பணியக அலுவலகம் நேற்று முன்தினம் ஐக்கிய நாடுகளுக்கான சனத்தொகை நிதியத்தின் ஆசிய பசுபிக் பிராந்திய பணிப்பாளரினால் திறந்து வைக்கப்பட்டது.

## நிர்வாகத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய நிர்வாகத் தெரிவுக் கூட்டம் குறித்த சங்க மண்டபத்தில் கூட்டுறவுத் திணைக்கள உத்தியோகத்தர்கள் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.

குறித்த தெரிவில் நிர்வாக சபைத் தலைவராக ப.கேசவதாசன், உப தலைவராக செ.குமாரசிங்கம், பணிப்பாளர் சபை உறுப்பினர்களாக சி. பரமானந்தராசா, கா. பார்த்தீபன், தி. உதயசூரியன், ஆ.அனஷ்ரிகா ,திருமதி.கு.சயந்தினி ஆகியோர் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதனப் பெயர் மாற்றம்

யாழ்.மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் 18 சுவாமியார் வீதி 54/3 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் இராமலிங்கம் துரைசாமி சபாநடேசன் பெண் மாணிக்கம் என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம், இராமலிங்கம் துரைச்சாமி அவர்கள் 29.12.1945 ஆம் திகதியிட்ட பிரசித்த நொத்தாரிசு தில்லையம்பலம் குமாரசாமி முகதாவில் 7754 ஆம் இலக்க நன்கொடை உறுதி மூலம் யாழ்ப்பாணம் துரைசாமி வைத்திய நாதனுக்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம், சுவாமியார் வீதி தற்போது ஐக்கிய ராச்சியத்தைச் சேர்ந்த இந்திராணிப்பிரியதர்சினி சுந்தரதாசன், சுந்தரதாசன் இராஜநாயகம், சௌந்தரராஜன் வைத்தியநாதன் ஆகியோர் பிரான்ஸ் ஐச் சேர்ந்த திருவருட்செல்வி சற்குருநாதன், சற்குருநாதன் கந்தசாமி.கனடாவைச் சோந்த வரதராஜன் வைத்தியநாதன், தில்லைராஜன் கைம்பெண் ராஜலட்சுமி, குமுதினி மகேந்திரன், சுந்தரம் மகேந்திரன் ஆகியோர் அற்றோனித் தத்துவக்காரர் இல 20/3 சுவாமியார் வீதி, கொழும்புத்துறை மேற்கு, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ரோஹினி சாந்தகுமார் மூலம் வெளிப்பட்டு ரோஹினி சாந்தகுமார் மற்றும் பரராஜசிங்கம் சாந்தகுமார் 29.08.2020 ஆம் திகதியிடப்பட்ட பிரசித்த நொத்தாரிசு மரியதாஸ் மகிழினி மடோனா முகதாவில் 411 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் யாழ்ப்பாணம் கொழும்புத்துறை இல 46A சுவாமியார் வீதி நடராஜா மகள் சுபத்திராதேவிக்கும் (ஆதன அட்டவணை 1) 29.08.2020 ஆம் திகதியிடப்பட்ட பிரசித்த நொத்தாரிசு மரியதாஸ் மகிழினி மடோனா முகதாவில் 412 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் யாழ்ப்பாணம் கொழும்புத்துறை இல 5 சுவாமியார் வீதி செல்வரட்ணம் புஸ்பாகரன் மற்றும் பெண் விஜயநிர்மலாவிற்கும் (ஆதன அட்டவணை 2) வழங்கியுள்ளனர்.

**ஆதன அட்டவணை 1**

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளிக் கோவிற்பற்று யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பிரிவு யாழ்ப்பாணம் மாநகரசபை J/63 கிராமசேவையாளர் பிரிவு கொழும்புத்துறை இறை "பெற்றி வளவு அருகில்திகம்" நில.பர 4 இது தற்போது உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் ந.கேதீஸ்வரன் 24.08.2020 ஆம் திகதியிட்டு அளந்து வரைந்த 1677/1 ஆம் இலக்க நில அளவைப்படத்தில் துண்டு 1 முதல் துண்டு 3 வரை சுட்டப்பட்ட நில.பர.3குளி 03.88. இதில் துண்டு 1 எனச் சுட்டப்பட்ட பாகம் இதன் விசாலம் நிலப்பரப்பு ஒன்று குளி ஒன்பது (நில.பர 1குளி 9) ஆம் கிணறும் இதற்கு எல்லைகள்.

வடக்கு கிழக்கு. : சுப்பிரமணியம் சண்முகரெத்தினத்தின் ஆதனம்.
மேற்கு : பசுபதி பெண் பாலமேகலாவின் ஆதனம்.
தெற்கு : 1677/1 ஆம் இலக்கப் படத்தில் துண்டு 2 என சுட்டப்பட்ட இதன் மிகுதி ஆதனமும் துண்டு 3என சுட்டப்பட்ட 3 மீற்றர் அகலப்பாதையும்.
இன்னும் துண்டு 3 என சுட்டப்பட்ட இதன் 3 மீற்றர் அகலப்பாதையால் போக்குவரத்து செய்யும் பாதை பாவிப்புரித்தும் மற்றும் இதன் தெற்கேயுள்ள 1677/1 ஆம் இலக்கப்படத்தில் துண்டு 2 எனச்சுட்டப்பட்ட ஆதனத்திற்கு கிணற்றில் தண்ணீர்ப் பங்கும் அதை நீர் இறைக்கும் இயந்திரத்தை பொருத்தி குழாய்வழியாக நீரைபெற்றுக்கொள்ளும் உரித்து புறநீங்கலாகவும் மற்றும் இதைச் சேர்ந்த வனைத்தும்.

**ஆதன அட்டவணை 2**

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளிக் கோவிற்பற்று யாழ்ப்பாணம்.

பிரதேச செயலாளர் பிரிவு யாழ்ப்பாணம் மாநகரசபை 1/63 கிராமசேவையாளர் பிரிவு கொழும்புத்துறை இறை "பெற்றி வளவு அருகில்திகம்" நில.பர 4 இது தற்போது உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் ந.கேதீஸ்வரன் 24.08.2020 திகதி யிட்டு அளந்து வரைந்த 1677/1 ஆம் இலக்க நில அளவைப்படத்தில் துண்டு 1 முதல் துண்டு 3 வரை சுட்டப்பட்ட நில.பர. 3குளி 03.88. இதில் துண்டு 2 எனச் சுட்டப்பட்ட பாகம் இதன் விசாலம் நிலப்பரப்பு ஒன்று குளி எட்டு தசம் மூன்று ஐந்திற்கும் எல்லைகள்.

கிழக்கு : சுப்பிரமணியம் சண்முகரெத்தினத்தின் ஆதனம்.
வடக்கு: 1677/1 இலக்கப்படத்தில் துண்டு 1 எனச் சுட்டப்பட்ட இதன் மிகுதி ஆதனம்.
தெற்கு: சுவாமியார் ஒழுங்கை.
மேற்கு : 1677/1 ஆம் இலக்கப் படத்தில் துண்டு 2 என சுட்டப்பட்ட இதன் மிகுதி ஆதனமும் துண்டு 3 எனச் சுட்டப்பட்ட 3 மீற்றர் அகலப்பாதையும்.

துண்டு 1 ஆதனத்தில் உள்ள கிணற்றில் பங்கும் குறித்த நீரை தமது ஆதனத்திற்குள் எடுத்துச் செல்லும் உரிமையும் மட்டும் மற்றும் இதைச் சேர்ந்தவனைத்தும்.

தற்போது இவ்வாதனத்தில் ஆதன அட்டவணை 1 இல் விபரிக்கப்படும் ஆதனத்தினை 411 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் நடராஜா மகள் சுபத்திராதேவியும் ஆதன அட்டவணை 2 இல் விபரிக்கப்படும் ஆதனத்தினை 412 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் செல்வரட்ணம் புஸ்பாகரன் மற்றும் பெண் விஜயநிர்மலாவும் என்ற இருவரும் தமது பெயரை எமது ஆதனப்பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார்கள். எனவே இவ்வாதனத்திற்கு முழுமையாகவோ அல்லது பகுதி அளவிலோ உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாத காலத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராதவிடத்து குறித்த ஆதன அட்டவணை 1 இல் விபரிக்கப்படும் ஆதனமானது நடராஜா மகள் சுபத்திரா தேவிக்கும் ஆதன அட்டவணை 2 இல் விபரிக்கப்படும் ஆதனமானது செல்வரட்ணம் புஸ்பாகரன் மற்றும் பெண் விஜயநிர்மலாவும் என்னும் பெயர்களுக்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றம் செய்வதால் எழக்கூடிய எப்பொறுப்பிற்கும் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

(சி-8438)

**ஆணையாளர்,**
**மாநகரசபை,யாழ்ப்பாணம்.**

## மின்சாரக் கட்டணம் 14 வீதத்தால் குறைப்பு? இன்று இறுதி முடிவு எட்டப்படுமா?

(கொழும்பு)

மின்சாரக் கட்டணத்தை சராசரியாக 14 வீதத்தால் குறைக்க முடியும் என இலங்கை மின்சாரசபை, இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் தெரிவித்துள்ளது.

குறித்த தீர்மானமானது மின்சாரக் கட்டணத்தை 18 வீதத்தால் குறைக்க முடியும் என்ற எரிசக்தி அமைச்சரின் கூற்றுக்கு முரணாக எடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், வாடிக்கையாளர் பிரிவினருக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் திருத்தப்பட்ட கட்டண முன்மொழிவு தயாரிக்கப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.எவ்வாறாயினும், மின் கட்டண திருத்தம் தொடர்பில் இன்று இறுதி முடிவு அறிவிக்கப்படும் என்றும் ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (நி-5-6)

## 2024 லீப் வருடம்: கூகுள் வெளியிட்டுள்ள டூடுல்




லீப் தினத்தை முன்னிட்டு கூகுள் நிறுவனம் அதன் தேடுபொறி பக்கத்தில் டூடுல் ஒன்றை வெளியிட்டுள்ளது.

கூகுளின் டூடுல் லீப் தினமான

(கொழும்பு)

ஒவ்வொரு 4 வருடங்களுக்கும் ஒருமுறை லீப் வருடம் வரும் அந்தவகையில் இந்தவருடம் லீப் வருடமாக கருதப்படுகின்றது.

பெப்ரவரி 29 ஆம் திகதியை குறிக்கும் வகையில் தவளையின் படத்தை கூகுள் நிறுவனம் வெளியிட்டுள்ளது. (நி-5-6)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்:ரேவதி<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: H.N.D.E (Civil Engineer),TO<br>எதிர்பார்ப்பு: படித்த தொழில் புரியும் பெண்<br>தொ.இ: B/14019 | பிறப்பு: 1997 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 26<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:Dip in Pharmacy, Pharmacist<br>எதிர்பார்ப்பு: உயர் பதவி<br>தொ.இ: G/14035 |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 33 1/2<br>உயரம்: 6<br>தகைமை/தொழில்: Software Engineer(London)<br>எதிர்பார்ப்பு: படித்த நற்குணமுள்ள பெண்<br>தொ.இ: B/14021 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: அனுஷம்<br>உயரம்: 5'5"<br>செவ் சூரி 3 இல்<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ:G/14037 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம் : அவிட்டம்<br>கி.பா: -<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: PHD(CEO)<br>எதிர்பார்ப்பு : குணமான பெண்.<br>தொ.இ: B/14022 | பிறப்பு: 1996 - RC<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>உயரம்: 5'3"<br>செவ் சூரி 9 இல்<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு. உள்நாடு ஆயின் உத்தியோகம்<br>தொ.இ:G/14039 |
| பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம் : பரணி<br>கி.பா: 06<br>உயரம்: 5'7"<br>செவ்வாய் சூரி 11 இல்<br>தகைமை/ தொழில்: MBA,BEng(Hons),Assitant Service Eng<br>எதிர்பார்ப்பு: அரச. தனியார் உத்தியோகம்.<br>தொ.இ: B/14023 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 48<br>உயரம்: 168 Cm<br>தகைமை/தொழில்: BA,MA,(DO)<br>எதிர்பார்ப்பு:பட்டதாரி. அரச/தனியார் உத்தியோகம்<br>தொ.இ:G/14043 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 4000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதம்

# தொடருந்து விபத்தில் 12 பேர் உயிரிழப்பு



(டில்லி)
இந்தியாவின் ஜார் கண்ட் மாநிலம் ஜம்தாரா வில் இடம் பெற்ற தொட ருந்து விபத்தில் 12 பேர் பலியானதோடு பலர் காய மடைந்துள்ளதாக அந் நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

குறித்த விபத்தானது நேற்று முன்தினம் இடம் பெற்றுள்ளது.

இந்நிலையில் தொட ருந்து ஒன்றில் இருந்து இறங்கி தண்டவாளத்தில் நடந்த பயணிகளை மற் றொரு தண்டவாளத்தில் பயணித்த தொடருந்து மோதியபோதே இந்த அனர்த்தம் நிகழ்ந் துள்ளதாக தெரிவிக்கப்படு கிறது.

இறந்தவர்கள் இன் னும் அடையாளம் காண ப்படாத நிலையில் மீட்புப் பணிகளும் விசாரணை களும் தொடர்ந்தும் இடம் பெறுகின்றன. (நி-5-6)

# காசா ஜபாலியா அ

# கால்நடை தீவனங்களை

(காசா)

**வடக்கு காசாவில் உள்ள ஜபாலியா அகதிகள் முகாமில் பசியால் வாடும் குடும்பங்கள் பல, கால்நடை தீவன ங்களை உணவாக்கும் அவலம் ஏற் பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் அதிர்ச்சி தகவல் வெளியிட்டுள்ளன.**

இஸ்ரேல் - ஹமாஸ் போருக்கு முன்னர் பால ஸ்தீனப் பகுதிகளில் இரு ந்த மிகப்பெரிய முகாமாக ஜபாலியா காணப்பட் டது.

1948 இல் இருந்தே செய ற்பட்டுவரும் இந்த முகாமில் சுத்தமான குடிநீர் கிடைப்பதில்லை என்றும், மின் தடை இருக்கிற அதேவேளை 100, 000 இற்கும் அதிகமான மக்கள் தங்கும் அந்த முகாமில் வேலையின்மை மற்றும் வறுமை முக்கிய பிரச் சினையாக இருந்து வருகிறது.

இந் நிலையில் இஸ் ரேல் படைகளின் குண்டு வீச்சு காரணமாக உதவி நிறுவனங்களால் அந்த பகுதிக்குள் செல்ல முடியாமல் இப்போது உணவும் இல்லாது தவி த்து வருகின்றனர்.

பிளாஸ்ரிக் பாத்திர ங்கள் மற்றும் நசுங்கிய சமையல் பாத்திரங்களை கையில் ஏந்தியபடி குழ ந்தைகள் உணவுக்காக எதிர்பார்த்து காத்திருக்

# இஸ்ரேலைத் தாக்கிய ஹிஸ்புல்லா அமைப்பு

(ஜெருசலேம்)
வடக்கு இஸ்ரேலின் மவு ண்ட் மெரான் பகு தியை நோக்கி ஹிஸ்புல்லா அமைப்பினர் 35 ஏவு ரொக் கெட்டுக்களை ஏவி தாக் குதல் நடத்தியதாக சர்வ தேச ஊடகங்கள் தெரிவித் துள்ளன.

இஸ்ரேல் மீது கடந்த ஆண்டு ஒக்டோபர் 7 ஆம் திகதி ஹமாஸ் அமைப்பு நடத்திய தாக்குதலுக்கு இஸ் ரேலும் பதிலடி கொடுத்து வருகிறது.

இதனால் பாலஸ் தீனர் களில் மொத்தம் 30 ஆயிரத்திற்கும் மேற்பட் டோர் உயிரிழந்து உள் ளனர் என்று காசா சுகாதார அமைச்சகமும் தெரிவித்து இருந்தது.

ஹமாஸ் அமைப்புக்கு எதிராக ஒட்டுமொத்த வெற்றி கிடைக்கும் வரை போரானது தொடரும் என்று இஸ் ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு சபதம் எடுத்துள்ளார்.

இதனால் எகிப்திய எல் லையையொட்டிய காசா வின் தெற்கு பகுதியில் அமைந்த ரஃபா நகரை நோக்கி செல்ல திட்டமிட்டு அதற்கான நடவடிக்கை களில் இஸ்ரேல் இராணு வம் ஈடுபட்டு வருகிறது.

இ ந் நி லை யி ல் , அண்டை நாடான லெப னானில் இரு ந்து வடக்கு இஸ்ரேலின் மவுண்ட் மெரான் பகுதியை நோக்கி ஹிஸ்புல்லா அமைப்பினர் 35 ரொக்கெட்டுகளை ஏவி தாக்குதல் நடத்தினர். இதனை இஸ்ரேல் பாது காப்பு படையினர் அறிந்து பதிலடி கொடுத்துள்ளனர்.

இதன்படி இஸ்ரேலின் போர் விமானங்கள் பறந்து சென்று,ஹன்னியே, ஜிப்சித், பைசரியே மற்றும் மன்சவுரி பகுதியில் அமைந்த இரா ணுவத்தளம் மற்றும் ஹிஸ் புல்லா அமைப்பினரின் உட் கட்டமைப்புகள் மீது தாக்கு தல் நடத்தியதாக தெரிவிக்க ப்பட்டுள்ளது. (நி-5-6)

# அமெரிக்க ஜனாதிபதி
# பைடனுக்கு பதில் மிச்செ

## கருத்துக் கணிப்பு



(வோஷிங்டன்)
அமெரிக்க ஜனாதிபதி தேர் தலில் பைடனிற்கு பதில் மிசெல் ஒபாமா போட்டியிட வேண்டும் என ஜனநாயகக் கட்சியினர் விரும்புவதாக கருத்துக் கணி ப்பில் தெரியவந்துள்ளது.

ஜனாதிபதி தேர்தலில் டொனால்ட் ட்ரம்பிற்கு எதிராக ஜோ பைடன் போட்டியிடக் கூடாது என பெரும் பான் மையான ஜனநாயக கட்சியினர் கருதுவதும் இந்த கருத்துக் கணிப்பின் மூலம் தெரிய வந்துள்ளது.

மிசெல் ஒபாமா டொனால்ட் ட்ரம்பிற்கு எதிராக போட்டியிட வேண்டும் என ஜனநாயக கட்சியினர் விரும்புகின்றனர்.

அதேசமயம் வரும் நவம்பர் தேர்தலிற்கு முன்னர் ஜோ பைடனிற்கு பதில், கட்சி ஒரு வேட்பாளரை நியமிப் 48 வீதமான ஜனநா கட்சியினர் ஆதரவளித்த அதேவேளை 38 வீத வர்கள் இதனை நிராகர ள்ளனர்.

பைடனிற்கு பதில் தேர்தலில் போட்டியிட டும் என்பது குறித்து ஜன க்கட்சியினர் மத்தியில் கருத்து காணப்படாத லும் 20 வீதமானவர்கள் ஒபாமாவை குறிப்பிட் னர்.

அதேவேளை ஹ ஹாரிஸ் உட்பட பலரின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகதிகள் முகாமில்

# ளை உணவாக்கும் அவலம்

பா
ம்
ன
ற்
ள்




அந்த
சல்ல
போது
நு தவி

த்திர
ங்கிய
களை
ஷ குழ
க்காக
திருக்

கின்றனர்.

பெண் ஒருவர் தெரி விக்கையில், உணவு இல்லை, கோதுமை இல்லை, குடிநீர் இல்லை, கால்நடை தீவனங்களை உணவாக்குவதை தவிர வேறு வழியில்லை என்று கண்ணீருடன் குறிப்பிட்டு ள்ளார்.

பசியால் சாகும் நிலை ஏற்பாட்டதால் ஒரு குடும்பம் குழந்தைகளுக்கு உணவளிக்க தங்களின் குதிரையை கொன்று சமைத்து சாப்பிட்ட பரிதாபமான சம்பவம் நிகழ்ந்துள்ளது. (நி-5-6)

## பாகிஸ்தானில் விபத்து

### குழந்தைகள் உட்பட 10 பேர் பலி



(இஸ்லாமாபாத்)

வடமேற்கு பாகிஸ்தானின் கைபர் பக்துன்க்வாவில் கடந்த செவ்வாய்க் கிழமை சென்ற பேருந்து பள்ளத்தில் கவிழ்ந்ததில் 10 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். மேலும், 15 பேர் காயமடைந்துள்ளனர்.

ஹரிப்பூர் மாவட்டத்தில் உள்ள கான்பூரில் இருந்து மலைப்பாங்கான கிராமத்துக்கு குறித்த பேருந்து சென்று கொண்டிருந்த போது தர்னாவா என்ற இடத்தில் விபத்துக்குள்ளானது.

அதிக வேகம் காரணமாக ஒரு திருப்பத்தின் போது பேருந்து சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து பள்ளத்தாக்கில் விழுந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இறந்தவர்களில் ஆண்கள். பெண்கள் மற்றும் குழந்தைகள் அடங்குவர். விபத்து நடந்த இடத்துக்கு விரைந்த மீட்பு வாகனங்கள் மற்றும் உள்ளூர் மக்களின் உதவியுடன் காயமடைந்த பயணிகளை மீட்டு ஹரிபூர் மாவட்டத்தில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்துள்ளனர். (நி-5-6)

# தி தேர்தலில்


# சல் ஒபாமா

## ப்பு

பதில், கட்சி வேறு
ளரை நியமிப்பதற்கு
ன ஜனநாயகக்
ஆதரவளித்துள்ள
ள 38 வீதமான
ளை நிராகரித்து

ற்கு பதில் யார்
போட்டியிட வேண்
குறித்து ஜனநாய
மத்தியில் பொதுக்
ணப்படாத போதி
மானவர்கள் மிசெல்
குறிப்பிட்டுள்ள

ளை ஹமாலா
ட்பட பலரின் பெய



ர்கள் குறிப்பிட்டுள்ள போதிலும் முன்னாள் ஜனாதிபதி ஒபாமாவின் துணை வியாருக்கு அதிகளவு ஆதரவு காணப்படு கின்றதாகவும் கூறப்படுகின்றது. (நி-5-6)

# ரஷ்யாவுக்கு ஆயுத ஏற்றுமதி செய்யும் வடகொரியா

## தென்கொரியா குற்றச்சாட்டு

(சியோல்)

உக்ரைனுக்கு எதிரான போரில் ரஷ்யாவிற்கு பாரியளவான ஆயுதங்களை வடகொரியா ஏற்றுமதி செய்துள்ளதாக தென்கொரியா குற்றம் சுமத்தியுள்ளது.

அதன்படி கடந்த ஜூலை மாதத்திலிருந்து இதுவரை சுமார் 6,700 கொள்கலங்களில் மில்லியன் கணக்கான துப்பாக்கி ரவைகள் உள்ளிட்ட ஆயுதங்களை வடகொரியா அனுப்பி வைத்துள்ளதாக தென் கொரிய பாதுகாப்பு அமைச்சர் சின் வென்சிக் தெரிவித்துள்ளார்.

ஆயுத வழாங்கலுக்கு பதிலீடாக உணவுப் பொருட்களை ரஷ்யா, வடகொரியாவிற்கு வழங்கியுள்ள



தாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை வட கொரிய ஆயுத தொழிற்சாலைகள் குறைந்த மூலப்பொருள் மற்றும் மின்சார குறைவு காரணமாக தமது வினைத்திறனை இழந்துள்ளதாகவும் தென்கொரியா சுட்டிக் காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை மாணவர்களுடன் சென்ற பேருந்து விபத்திற்குள்ளானது

## 24 மாணவர்கள் உட்பட 36 பேர் காயம்

(மொனராகலை)

மொனராகலையில் இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பேருந்து ஒன்று விபத்துக் குள்ளானதில் 36 பேர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்களில் 24 பாடசாலை மாணவர்களும் அடங்குவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுக் காலை புத்தம பகுதியிலிருந்து மொனராகலை நோக்கி பயணித்த பேருந்து ஒன்றே வேகக் கட்டுப்பாட்டை இழந்து சியம்பலாண்டுவ பகுதியில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

விபத்தில் காயமடைந்தவர்கள் சியம்பலாண்டுவ மற்றும் மொனராகலை வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த விபத்து ஏற்படும் சந்தர்ப்பத்தில் அந்த பேருந்தில் 60 பேர் வரை பயணித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (நி-5-6)

# சஜித்திற்கு அழைப்பு விடுக்கும் பாலித்த

(கொழும்பு)



ஜனாதிபதித் தேர்தலுக்காக அமைக்க இருக்கும் பரந்துபட்ட கூட்டணியில் சஜித் பிரேமதாஸவினையும் இணைந்து கொள்ள முடியுமென ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் பாலித்த ரங்கே பண்டார அழைப்பு விடுத்துள்ளார்.


ஐக்கிய தேசிய கட்சியின் தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் "ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் பலரும் தம்முடன் இணைந்து கொள்ள உள்ளனர். காலப் போக்கில் சஜித் பிரேமதாஸவும் இணைந்து கொள்ள இடமிருக்கின்றது.

அத்துடன், ஜனாதிபதி தேர்தலை இலக்கு வைத்து எதிர்வரும் 10 ஆம் திகதி குருணாகலையில் நடத்த இருக்கின்ற மாநாட்டில் அரசியல் கட்சிகளைச் சேர்ந்த பலர் தம்முடன் கைகோர்க்க உள்ளனர்.

இந்நிலையில், எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் கூட்டணி அமைக்கும் நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்று வருவதுடன், 80இற்கும் மேற்பட்ட அமைப்புகள் தம்முடன் கலந்துரையாடி உள்ளனர். அவர்கள் அனைவரும் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க இணக்கம் தெரிவித்துள்ளனர்" என அவர் தெரிவித்துள்ளார். (நி-5-6)

# ஹவுதிக் குழுக்களால் கப்பல் போக்குவரத்து பாதிப்பு



(கொழும்பு)

இந்து - பசுபிக் பிராந்தியம், புவிசார் அரசியலின் மையப்பகுதியில் மீண்டும் நிலை கொள்வதாக இந்தியாவின் முன்னாள் தேசிய பாதுகாப்பு ஆலோசகரும் மூத்த இராஜதந்திரியுமான சிவசங்கர் மேனன் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற இந்து சமுத்திர மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் "செங்கடலில் பாதுகாப்பான கப்பல் போக்குவரத்துக்கு இடையூறாக உள்ள ஹவுதி குழுக்களின் செயற்பாடுகளினால் உலக கப்பல் போக்குவரத்தின் 90 வீதம் பாதிக்கப்படுகின்றது.

இவ்வாறான செயற்பாடுகளினால் பல தீவு நாடுகளின் கடல் இறையாண்மை அச்சுறுத்தலுக்குள்ளாவதுடன் இதனை தவிர காலநிலை மாற்றம் மற்றும் இயற்கை அனர்த்தங்கள் என்று பல்வேறு சவால்களும் காணப்படுகின்றன.

குறிப்பாக ரஷ்ய - உக்ரைன் போர், இஸ்ரேல் - ஹமாஸ் போர் என்பன இதில் பெரிதும் செல்வாக்குச் செலுத்துகின்றன" என சிவசங்கர் மேனன் தெரிவித்துள்ளார். (நி-5-6)

# இன்று ஒரு தகவல் 52



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## நினைவாற்றல்

கடன் கொடுத்து விட்டு அதை மறக்காம நினைத்துக்கொண்டு இருக்கிறது சகஜம். கடன் வாங்கி விட்டு அதை அப்படியே மறந்து விடணும். இது இந்த உலகத்தில் ரொம்ப சகஜம்.

போன மாதம் பத்து ரூபா கொடுத்தேனே என்று ஒருத்தன் வந்து நிற்பான். கடனை வசூலிக்க வந்தவனை பார்த்து கடன் வாங்கியவன் யார் என்று கேட்பான். வந்தவனையே ஞாபகம் இல்லாத போது அவனிடம் வாங்கிய கடனா ஞாபகம் இருக்கப் போகிறது.

தனக்கு வேண்டாதது மனதுக்கு கசப்பானது அதையெல்லாம் மனிதன் மறந்து விடுகிறானாம். உளவியல் அறிஞர்கள் நினைவாற்றலை 2 வகையாகப் பிரிக்கிறார்களாம். குறுகியகால நினைவு, நீண்டகால நினைவு.

நாம் நினைவில் வைத்திருக்க வேண்டியதன் அவசியத்தைப் பொறுத்தும் நோக்கத்தைப் பொறுத்தும் இதை இப்படி பிரிக்கிறார்கள். இன்றைக்கு பேப்பரில் நாம் ராசி பலன் என்று ஒன்று பார்க்கிறோம். அதை நாம் வாழ்நாள் முழுவதும் நினைவில் வைத்து கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. திருக்குறளை படிக்கிறோம். அது நமக்கு எப்பவும் ஞாபகம் இருக்க வேண்டும். பாடம் படிக்கிற சமயத்தில் நமக்கு ஞாபகசக்தி அவசியம் வேண்டும்.

நினைவாற்றல் என்பது நாம் கற்கக் கூடிய தன்மையை பொறுத்து என்று சொல்லுகிறார்கள். இதை வளர்ப்பதற்கு என்று சில நடைமுறைகள் இருக்குது.

முதலில் படிப்பதற்கு ஆர்வம் இருக்க வேண்டும். வேண்டா வெறுப்பாக போய் இருந்தால் என்ன நிலை ஆகும். படிப்பதை, கேட்பதை நன்றாக மனதில் வாங்கிக் கொள்ள வேண்டும் என்கின்ற ஆர்வம் இருக்க வேண்டும். கவனத்தை வேறு வகையில் சிதற விடக்கூடாது. ஒருமுகப்படுத்தணும். படிக்கும் பாடத்தை மனதுக்குள்ளேயே சொல்லிப் பார்க்கணும். அதற்கு கற்பனையைப் பயன்படுத்த வேண்டும்.

அதனாலே தான் படத்தோட பாடம் சொல்லி கொடுக்கிறார்கள். படிக்கும் செய்தியை மற்ற செய்தியோடு தொடர்புபடுத்தி படிக்கணும். நமக்கு தெரிந்த மற்றைய பொருளோட தொடர்புபடுத்தி பார்க்கணும்.

நயத்தோடு கற்கணும், இசையோடு கற்கணும். ரொம்பநாள் நினைவு வைத்துக்கொள்வதற்கு இது நல்ல வழி. சின்னப்பிள்ளைகள் வாய்ப்பாடு கற்றுக்கொள்ளும் முறையை யோசித்துப் பாருங்கள். அது மாதிரி நாம் என்ன படிக்கிறோமோ அதை பிரித்து பொருள் தெரிந்து படிக்கணும்.

படித்த பின்பு புத்தகத்தை மூடி வைத்து விட்டு அதை சொல்லி பார்க்கணும். படித்ததற்கு பின்பு ஓய்வு அல்லது உறக்கம் ரொம்ப நல்லது. படித்த பின்பு தான் தூக்கம வர வேண்டும். படிக்கும் போது தூக்கம் வந்தால் அது நல்லது இல்லை. படித்த பின்பு கடினமான வேலையில் ஈடுபடுவது நல்லது இல்லை.

ஒரு புத்தகத்தை படிப்பதற்கு முன்பு அதன் உட்பொருளை அல்லது கருத்தை தெரிந்து படிப்பது நல்லது.

பொதுவாக திருப்பி திருப்பி படிப்பது ஞாபக சக்தியை அதிகரிப்பதற்கான ஒரு வழி. படிக்கும் காலத்திலேயே இது வந்து விட்டால் பின்பு ரொம்ப உதவியாக இருக்கும்.

இன்றைய இளைஞர்கள் நாளைய தலைவர்கள்!

தலைவர் ஆகிவிட்டால் நிறைய புள்ளி விபரங்கள் ,எல்லாம் சொல்ல வேண்டி இருக்கும். ஞாபகசக்தி இல்லை என்று சொன்னால் எப்படி சொல்வது?

"ஜெனரல் ஸ்மட்ஸ்" என்று ஒருத்தர். தென் ஆபிரிக்காவில் பிரதமராக இருந்தார் பாராளுமன்றத்தில் பேசுவதற்கு அவருக்கு புள்ளி விபரம் தேவையாக இருந்தது.

மறு நாள் அதைப்பற்றி பேச வேண்டும். செயலாளரை கூப்பிட்டார். "இதோ பாருங்கள் நாளைக்கு இந்த புள்ளி விபரங்கள் தேவை" இதை வைத்து தான் நாம் எதிர்க்கட்சியை திணறடிக்கணும் என்றார்.

செயலாளர் திகைத்து போய் விட்டார். "சார் இந்த புள்ளி விபரங்களை சேர்ப்பதற்கு குறைந்தது ஐந்து வருடங்கள் ஆகும்" என்று சொன்னார்.

அது எல்லாம் எனக்கு தெரியாது. நீங்கள் என்ன செய்வீர்கள் ஏது செய்வீர்கள் என்று எனக்கு தெரியாது. நாளைக்கு புள்ளி விபரம் கட்டாயமாக வேண்டும் என்று சொல்லி விட்டார் ஸ்மட்ஸ். ஆனால் அவராலே ஒன்றும் செய்ய முடியவில்லை.

மறுநாள் பாராளுமன்றம் கூடியது. புள்ளி விபரத்தை எடுத்து வீசி எல்லோரையும் ஆச்சரியப்பட வைத்து விட்டார் ஸ்மட்ஸ்! பேச்சு முடிந்ததும் செயலாளர் ஓடி வந்து எப்படி ஓரே இரவில் இவ்வளவு விடயங்களை சேகரித்தீர்கள் என்று கேட்டு ஆச்சரியப்பட்டார்.

ஸ்மட்ஸ் சிரித்து கொண்டு சொன்னார். "இந்த தகவலை சேகரிக்க அரசாங்கத்திற்கே 5 வருடம் ஆகும் என்று சொன்னீர்கள்".

அப்படி என்றால் இவையெல்லாம் உண்மைதான் என்று கண்டு பிடிக்க எதிர்க்கட்சிக்கு 15 வருடம் ஆகும். அவர்கள் கண்டுபிடித்து என்னை மடக்கிறதிற்குள்ளே நான் இந்த பதவியில் இருக்க போவது இல்லை. அது தான் அடிச்சு விட்டேன் என்று சொன்னாராம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குருந்தூர் வழக்கு யூலை மாதம் ஒத்திவைப்பு

(நெளுக்குளம்)


குருந்தூர்மலை B1053/2022 என்ற இலக்க முடைய வழக்கு தொடர்ச்சியாக தவணைகள் வழங்கப்பட்டு இடம்பெற்று வந்த நிலையில் நேற்று முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் இடம்பெற்றது.

குறித்த வழக்கில் சம்பந்தப்பட்ட முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் மற்றும் சமூக செயற்பாட்டாளர் இரத்தினராசா மயூரன் ஆகியோர் முன்னிலையாகியிருந்த நிலையில் வழக்கு விசாரணை விவாதங்கள் நடைபெற்று எதிர்வரும் யூலை மாதம் 25 ஆம் திகதிக்கு வழக்கு மீண்டும் தவணையிடப்பட்டுள்ளது. (நி-5-6-299)

# இருநாட்டு அரசாங்கமும் சாந்தனுக்கு அநீதி அளித்துள்ளது

(நெளுக்குளம்)

இலங்கை அரசாங்கத்தை போல் இந்திய அரசாங்கமும் சாந்தனுக்கு கொடூர வேலையை செய்திருக்கின்றது என முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்தார்.



சாந்தனின் இறப்பு தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் கருத்து தெரிவிக்கையில்,

இந்தியா தீர்வை எமக்கு தருவதெனில் எப்போதே தந்திருக்க வேண்டும். தீர்வு விடயத்தில் நழுவல் போக்கிலேயே இருக்கின்றது.

சிறைச்சாலையில் இருந்த சாந்தனுடைய இறப்பு ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு சம்பவம்.

இறுதியாக எழுதிய கடிதம், தாய் அதற்காக போராடிய விடயங்கள் இவ்வளவு காலமும் சிறையில் வைத்திருந்து போராடிய தியாகியை இலங்கைக்கு அனுப்பி வைத்திருக்கலாம்.

அந்த ஆசையை கூட நிறைவேற்றாமல் கொடூர வேலையை இலங்கை அரசு ஏற்கனவே எங்களுக்கு செய்வது போல் இந்திய அரசாங்கமும் இவ்விடத்தில் செய்திருக்கின்றது என மேலும் தெரிவித்தார். (நி-5-6-299)

## பரந்தனில் இடம்பெற்ற நடமாடும் மருத்துவ முகாம்

(கண்டாவளை)

கிளிநொச்சி பரந்தன் பகுதியில் மாற்றுவலுவுடையோர் மற்றும் தொற்றா நோய்களுக்கான நடமாடும் மருத்துவ சிகிச்சை முகாம் ஒன்று நேற்று முன்தினம் இடம்பெற்றது.

கண்டாவளை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை ஏற்பாடு செய்திருந்த குறித்த மருத்துவ சேவையில் கண்டாவளை பிரதேசத்துக்கு உட்பட்ட சிவபுரம், பரந்தன், காஞ்சிபுரம் போன்ற கிராமங்களை சேர்ந்த மக்கள் கலந்து கொண்டனர்.

குறிப்பாக கண் சிகிச்சை மற்றும் தொற்றா நோய் போன்ற நோய்களுக்கான சிகிச்சை மற்றும் ஆலோசனைகளும் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6-315)

## 116 ஏக்கரில் சிறுபோகம் மேற்கொள்ளத் தீர்மானம்

(தருமபுரம்)

கிளிநொச்சி அக்கராயன் குளம் கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட மணியங்குளத்தின் கீழாக இம்முறை சிறுபோகத்தில் 116 ஏக்கரில் சிறுபோகப் பயிர்ச்செய்கை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குறித்த குளத்தின் கீழான சிறுபோக செய்கையின் அளவை தீர்மானிக்கும் கலந்துரையாடல் ஒன்று மணியங்குளம் பொதுநோக்கு மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. (நி-5-6-316)

# வவுனியா - தட்டாங்குளம் ரூ.5மில். செலவில் புனரமைப்பு



(குருமன்காடு)

வவுனியா - தட்டாங்குளம் 5 மில்லியன் ரூபாய் செலவில் புனரமைக்கும் வேலைத்திட்டத்தை வன்னி பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக்குழு தலைவருமான கு.திலீபன் நேற்று ஆரம்பித்து வைத்தார்.

உலக வங்கியின் கடன் திட்டத்தின் மூலம் காலநிலை மாற்றத்தினை எதிர்கொள்வதற்கான பன்முகப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வவுனியா, தட்டாங்குளத்தின் இரு மதகுகள் மற்றும் வாய்க்கால்கள் புனரமைக்கப்படவுள்ளன.

அதேவேளை மாவட்டத்தில் பறயநாளங்குளம், தவசிகுளம், சமனங்குளம், தட்டாங்குளம், விஞ்ஞானகுளம் மற்றும் ஈட்டிமுறிந்தகுளம் ஆகிய குளங்கள் 30 மில்லியன் ரூபாய் செலவில் புனரமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6-250)



கிளிநொச்சி முரசுமோட்டை முருகானந்தா கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா நேற்று கல்லூரி முதல்வர் திருமதி. சூரியகுமார் இராசேந்திரம் தலைமையில் இடம்பெற்றது.

(படம்- யதுபாஸ்கரன்)

## உடையார்கட்டு குள சிறுபோக கூட்டம்

(அக்கராயன்)

முல்லைத்தீவு உடையார்கட்டு குள சிறுபோக நெற்செய்கைக் கூட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. முத்தையன்கட்டு நீர்ப்பாசன பொறியியலாளர் தலைமையில் இக்கூட்டம் இடம்பெற்றது. எதிர்வரும் சித்திரை மாதம் 10ஆம் திகதி நெற்செய்கைக்கு குளத்தில் இருந்து நீர் திறந்து விடுவதாகவும் சித்திரை 10ஆம் திகதியில் இருந்து வைகாசி 5 ஆம் திகதிக்குள் சிறுபோக விதைப்பு நிறைவு செய்யப்பட வேண்டும் எனவும் தீர்மானம் எடுக்கப்பட்டது.

குளத்தின் நீர் மட்டம் முழுமையாக காணப்படுவதனால் 1,280 ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்வது எனவும் தீர்மானிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் தொழில்நுட்ப உத்தியோகத்தர், கிராம அலுவலர், விவசாயிகள் கலந்து கொண்டனர். (நி-5-6-350)


நீங்காத நினைவுகளுடன்

2ம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர். கருணாகரன் ரதீஸ்வரன் (ரதி)



தோற்றம்: 01.11.1964

மறைவு:-22.02.2022

பாரமாகி விட்டோம் என்றோ தூரமாகி
போனாய் அப்பா!
வண்ணப் புகைப்படமாய் வாழ்ந்து
கொண்டிருக்கிறாய்- நம்
வரவேற்பறையில் விதியின் சதி
நினைக்கும் பொழுது ஊற்றெடுக்கிறது
விழிகளில் நதி
கடைசிவரை முடிவில்லா பயணம்
போல ஆறாத ரணத்தோடு
பயணிக்க வைத்து விட்டாயே அப்பா..
என்றும் இறுதி நிமிடங்கள் எம் கண்ணுக்குள்ளே.

திதி:01.03.2024

வைரவர் வீதி,
ஏழாலை தெற்கு, ஏழாலை.

(19313)

மனைவி, பிள்ளைகள்.


# கொழுந்துப்புலவு-மயில் வாகனபுர வீதிபுனரமைப்பு பணிகள் ஆரம்பம்

(தருமபுரம்)

கண்டாவளை, பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கொழுந்துப்புலவு- மயில்வாகனபுரம் வீதி புனரமைப்பு பணிகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இக் கிராமத்தில் வாழும் மக்கள் தமது அன்றாட செயற்பாடுகளை மழைக் காலங்களில் குறித்த வீதி யூடாக மேற்கொள்ள முடியாத நிலை காணப்பட்ட நிலையில் தற்போது புனரமைப்பு பணிகள் ஆரம்பமானது தமக்கு பெரும் மகிழ்வாக இருப்பதாக கிராம மக்கள் கருத்து தெரிவித்தனர்.

2004ஆம் ஆண்டு வீதிப் புனரமைப்புத் திட்டத்தின் கீழ் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவீன் எண்ணக்கருவிற்கு அமைவாக வீதி போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சு, வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நிதிப்பங்களிப்புடன் இப்புனரமைப்புப் பணிகள் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6-316)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 420





வந்தியத்தேவனுடைய கத்தியின் மீது தேவேந்திரனுடைய வஜ்ராயுதத்தைப் போல் இளவரசரின் கத்தி தாக்கியது. வாணர்குல வீரன் தடுமாறினான். அவனுடைய கைப்பிடியிலிருந்து நழுவிப் பட்டாக் கத்தி கீழே விழுந்தது.

சுற்றிலும் கூடியிருந்தவர்கள் அச்சமயம் எழுப்பிய ஆரவாரம் அலை கடலின் ஓசையை ஒத்திருந்தது. அவ்வளவு ஆரவாரத்தையும் மீறிக் கொண்டு ஓர் இளம் பெண்ணின் உற்சாகமான சிரிப்பொலி கேட்டது. வந்தியத்தேவன் கீழே விழுந்த கத்தியை மீண்டும் எடுப்பதற்குப் பிரயத்தனம் செய்தான். இதற்குள் இளவரசர் பாய்ந்து சென்று அவனைக் கட்டித் தழுவிக் கொண்டார்.

"நீர் என்னுடைய வாளுக்குத் தோற்கவில்லை. வாளுக்கு வாள் சமமான லாகவத்துடன் போரிட்டீர். ஆனால் ஒரு பெண்ணின் கண் வாளுக்குத் தோற்றீர்! இதில் அவமானம் ஒன்றுமில்லை. எல்லோருக்கும் நேரக்கூடியது தான்!" என்றார்.

வந்தியத்தேவன் அதற்கு ஏதோ சமாதானம் சொல்ல ஆரம்பித்தான். அதற்குள் சேனாதிபதி பூதி விக்கிரம கேசரியும் பார்த்திபேந்திரனும் அவர்களை நெருங்கி வந்து விட்டார்கள்.

"இளவரசே! இந்தப் பிள்ளையை நான்தான் தங்களிடம் அனுப்பினேன்! இவன் ஏதாவது தவறாக நடந்து கொண்டு விட்டானா? கொஞ்ச நேரம் கதிகலங்கிப் போய் விட்டோம்!" என்றார்.

"ஆம், தளபதி! இவருடைய ஏச்சை என்னால் பொறுக்க முடியவில்லை. 'இலங்கையில் யுத்தம் நடக்கிறது என்றார்களே யுத்தம் எங்கே? யுத்தம் எங்கே?' என்று கேட்டு, என்னைத் துளைத்து விட்டார். 'இதோ யுத்தம்!' என்று காட்டினேன்!"

இவ்வாறு இளவரசர் கூறியதும் சுற்றியிருந்தவர்கள் அனைவரும் மறுபடியும் ஆரவாரம் செய்தார்கள்.

சேனாதிபதி வந்தியத்தேவனுடைய அருகில் வந்து அவன் முதுகில் தட்டிக் கொடுத்தார். "அப்பனே! இம்மாதிரி கத்திச் சண்டை பார்த்து எத்தனையோ நாள் ஆயிற்று! இளவரசருக்குச் சரியான துணைவன் நீ! சில சமயம் அவருக்கு இப்படித்தான் திடீர் திடீர் என்று தோள் தினவு எடுக்கும்! 'குஞ்சரமல்லன்' என்று பெயர் பெற்ற பராந்தக சக்கரவர்த்தியின் வம்சத்தில் பிறந்தவர் அல்லவா? அவருடன் நேருக்கு நேர் நின்று சண்டை பிடிக்க முடியாதவர்கள் அவருடன் நெடுநாள் சிநேகமாயிருக்க முடியாது!" என்றார்.

இதற்குள் இளவரசர் பார்த்திபேந்திர பல்லவரின் சமீபமாகச் சென்று, "ஐயா! தாங்கள் என்னைத் தேடி வந்திருக்கிறீர்கள் என்று கேள்விப் பட்டேன். தங்களைச் சந்திப்பதற்காகவே விரைந்து வந்தேன். காஞ்சியில் தமையனார் சௌக்கியமா? என் பாட்டனார் எப்படியிருக்கிறார்?" என்று கேட்டார்.

"தமையனாரும் பாட்டனாரும் தங்களுக்கு மிகவும் முக்கியமான செய்தி அனுப்பியிருக்கிறார்கள். இலங்கைக்கு வந்து தங்களைக் கண்டுபிடிப்பதற்கே நாலைந்து தினங்களாகி விட்டன. இனி ஒரு கணமும் தாமதிப்பதற்கில்லை" என்று பார்த்திபேந்திரன் கூறுவதற்குள் இளவரசர்.

"முக்கிய காரியமாக இல்லாவிட்டால் தாங்களே புறப்பட்டு வருவீர்களா? இனி ஒரு கணமும் தாமதிக்க வேண்டியதில்லை. இப்போதே செய்தியைத் தெரிவிக்க வேணும்!" என்றார்.

இச்சமயம் அவர்கள் சமீபத்தில் வந்த சேனாதிபதி பெரிய வேளார், "நடுச்சாலையில் இத்தனை பேருக்கு நடுவிலே ஒன்றும் பேச முடியாது. அதோ ஒரு பாழும் மண்டபம் தெரிகிறதே! அங்கே போகலாம்! நல்ல வேளையாக இந்த இலங்கையில் பாழும் மண்டபத்துக்குக் குறைவு கிடையாது!" என்றார். (தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## புலிக்கு வரிகள் வந்தது எப்படி?

(நேற்றைய தொடர்ச்சி)

அதே மாதிரி நான் எப்படி என்னோட பிறவி குணத்தை தெரிந்து கொள்வது எனக்கேட்டது.

விவசாயிக்கு இப்ப குழப்பம் வந்தது. மிருகங்களையும் மனிதர்களையும் பார்த்தவுடனே அடித்து சாப்பிடுற அளவுக்கு பலம் வாய்ந்த இந்த புலிக்கு அதோட குணத்தை பற்றி சொல்லி கொடுத்தா இந்த புலி முதலல நம்மலத்தான் அடித்து சாப்பிடும். இந்த புலிக்கிட்ட இருந்து எப்படி தப்பிப்பது என யோசித்தார்.

உடனே அவருக்கு ஒரு யோசனை வந்தது. நீ அந்த காளை மாட்டை பார்த்தியா அது கழுத்தில ஒரு கயிறு இருக்கும். அது வேலை முடிச்சதும் அதை மரத்தில கட்டி வைச்சிடுவேன். அதே மாதிரி உன்னையும் மரத்துல கட்டி வைக்கிறேன். உனக்கு உன்னோட பிறவிக் குணம் வருதான்னு பார்ப்போம் என்று சொன்னார்.



புலியும் மனிதர்களோட பிறவி குணமான தந்திரத்தை புரிஞ்சிக்காம, விவசாயி சொன்னதுக்கு சரி என்று சொன்னது. உடனே அந்த விவசாயி ஒரு பெரிய கயிறை எடுத்து வந்து புலியை மரத்தில கட்டி வைத்தார்.

கொஞ்ச நேரத்துக்கு அப்புறமா நிறைய சுள்ளி குச்சிகளை எடுத்து வந்து புலிக்கு அடியில் போட்டு தீ வைத்தார்.

ஆஹா மனிதர்களோடு குணம் இதுதானா? தான் தப்பிக்கணுமே என்று உதவி கேட்டு வந்த என்னையே கொல்ல பார்க்குறானே இந்த விவசாயி என கோபப்பட்டது. அப்பத்தான் தன்னோட பிறவி பலத்தை பற்றி விவசாயியும் அந்த காளை மாடும் சொன்னது அதுக்கு ஞாபகத்துக்கு வந்தது.

அப்பத்தான் புலி தன்னோட முழு பலத்தையும் உபயோகப்படுத்த ஆரம்பித்தது. ஒரே இழு இழுத்து மரத்தை சாச்சிடுச்சு புலி. மரத்தில இருந்து தப்பிச்சாலும் அத சுற்றி இருந்த கயிறு தீ பிடிச்சி எரிந்து கொண்டே இருந்தது. உடனே ஓடிப் போய் தண்ணீரில குதித்தது.

ஏற்கனவே தீயில வெந்த புண்ணுல தண்ணி பட்டதும் அந்த இடம் எல்லாம் வரி வரியா காயங்கள் தெரிய ஆரம்பித்தது. கொஞ்ச நாள் கழித்து அந்தக் காயங்கள் குணமானாலும் கறுப்பு வரிகள் அந்த புலிக்கு வந்துவிட்டது.

புது வரிகளோட இருந்த புலி தன்னோட பலத்தை அன்றைக்குத்தான் தெரிந்து கொண்டது. நரி மாதிரி அடுத்த மிருகங்களோட தொன தொனன்னு பேசுறதை நிறுத்தியது; தனக்கு தேவையான உணவை அதுவே வேட்டையாடி சாப்பிட ஆரம்பித்து விட்டது.

புது வரிகளோடும் புது பலத்தோடும் புலி உருமாறினதைப் பார்த்த காட்டு மிருகங்கள் சிங்கத்துக்கு அடுத்தபடியான இடத்தில புலியை பார்த்தார்கள்.

அன்றையில இருந்து புலி கம்பீரமான காட்டு விலங்காக வாழ்ந்து கொண்டு வருகின்றது. (முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிமையும் கடமையும் நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றவை. எமது உரிமைகள் இன்னொருவரின் கடமையிலும் இன்னொருவரின் உரிமைகள் எமது கடமையிலுமே தங்கியுள்ளது. - *அறிஞர்*

வலம்புரி

TP: 021 222 3378

website : www.valampurii.lk

## எந்தப் போராட்டமாயினும் பொதுமக்கள் பாதிக்கப்படலாகாது

சரியான திட்டமிடல்கள், தெரிவுகள், நீண்டகால நோக்கங்கள் இல்லாதபோது எல்லாமுமே குழப்பமாகவும் சிக்கலாகவும் அமைவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

இந்நிலைமைதான் இப்போது யாழ்ப்பாண பஸ் தரிப்பில் எதிரொலிக்கின்றது.

ஏற்கெனவே வவுனியாவில் புதிய பஸ் தரிப்பு நிலையம் அமைக்கப்பட்டபோது அது மிகப்பெரிய சர்ச்சைகளையும் குழப்பங்களையும் ஏற்படுத்தியிருந்தன. இன்னமும் அந்தப் பிரச்சினை அமுங்கிய நிலையிலேயே இருக்கிறது.

நிலைமை இதுவாக இருக்கையில், இப்போது யாழ்ப்பாணத்தில் தனியார் பஸ் தரிப்பு நிலையம் தொடர்பிலான சர்ச்சைகள் விஸ்வரூபமெடுத்துள்ளன.

இவ்வாறான நிலைமைகள் தோன்றுவதற்கு மூலகாரணம், யாழ்ப்பாண நகர அபிவிருத்தி தொடர்பில் சம்பந்தப்பட்டவர்களையும் துறைசார் நிபுணர்களையும் உள்ளடக்கியதான குழுக்களை அமைத்து அவர்களின் கருத்துக்களையும் ஆலோசனைகளையும் பெற்றுக் கொள்ளாமல் தாம் தாம் நினைத்த பாட்டில் திட்டங்களைத் தயாரித்து அதனை நடைமுறைப்படுத்துவதாகும்.

உண்மை. எந்தத் திட்டமிடலாக இருப்பினும் அதன் பயனாளிகளையும் அதனுடன் சம்பந்தப்பட்டவர்களையும் அணுகி அவர்களின் கருத்துக்களை உள்வாங்குவது கட்டாயமானது.

ஆனால் எங்கள் வட மாகாணத்தைப் பொறுத்தவரை அந்தப் பேச்சுக்கே இடமில்லை என்பதுதான் உண்மை.

பொதுவில் குறித்த திட்டத்தை எந்தத் திணைக்களம் அமுல்படுத்தவுள்ளதோ அந்தத் திணைக்கள அதிகாரிகள் எடுக்கின்ற முடிவுதான் இங்கு அறுதியாகின்றது.

ஆனால் சம்பந்தப்பட்ட திணைக்களத்தில் தீர்மானம் எடுக்கின்ற அதிகாரிக்கு அல்லது பொறியியலாளருக்கு அல்லது திட்டத்தை வகுப்பவருக்கு யாழ்ப்பாண நகரத்தின் கட்டமைப்பு, மக்களின் மனநிலை, அந்த மக்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகள் என எதுவுமே தெரியாமல் இருக்க வாய்ப்பு உண்டு.

இந்நிலையில் எழுந்தமானமாக சம்பந்தப்பட்ட திணைக்களம் தனது அலுவலகச் சுவருக்குள் இருந்து கொண்டு, திட்டங்களைத் தயாரித்து அதனை அமுல்படுத்தும்போது பிரச்சினைகள் பூதாகரமாகின்றன.

எது எவ்வாறாக இருப்பினும் யாழ்ப்பாண நகரத்தின் கட்டமைப்பு தொடர்ந்தும் உள்ளவாறு பேணப்படுமாயின், அதனால் கடுமையான பாதிப்புக்களையும் அசௌகரியங்களையும் பொதுமக்கள் எதிர்கொள்ள வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை ஏற்படும்.

அதேநேரம் தனியார் பஸ் சேவையாளர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடும்போது, வட பிராந்திய பஸ் சேவை எந்த இடையூறுமின்றி வழமைபோல் இடம்பெறுவதற்கு எவரும் எந்தத் தடையையும் ஏற்படுத்தக்கூடாது.

அவ்வாறு தடை ஏற்படுத்தப்படுமாயின், அது பொதுமக்களுக்குச் செய்கின்ற அநீதியாகும்.

எனவே அவரவர் தத்தம் பிரச்சினைகளுக்காகக் குரல் கொடுப்பது அவர்களின் உரிமையாக இருப்பினும் அதற்காக பொதுமக்களை பாதிக்கச் செய்யும் நடவடிக்கையில் யார் ஈடுபட்டாலும் அதுவிடயத்தில் நீதி பரிபாலனம் தக்க நடவடிக்கை எடுத்துப் பொதுமக்களைப் பாதுகாக்க வேண்டும்.

# சகல கட்சிகளையும் இணைத்து பலமான கூட்டணியை ஸ்தாபிப்போம்

## நாமல் எம்.பி தெரிவிப்பு

சகல கட்சிகளையும் இணைத்து பலமான அரசியல் கூட்டணியை ஸ்தாபிப்போம் என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளாார்.

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்று ஒரு தரப்பினர் குறிப்பிடுவது அவர்களின் தனிப்பட்ட நிலைப்பாடே தவிர அது கட்சியின் நிலைப்பாடல்ல என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், பொதுஜன பெரமுன தலைமையிலான பரந்துபட்ட அரசியல் கூட்டணியின் ஊடாகவே ஜனாதிபதி வேட்பாளர் தெரிவு செய்யப்படுவார், ஜனாதிபதித் தேர்தலுக்கான உத்தியோக பூர்வ அறிவிப்பு வெளியானதும் எமது வேட்பாளரை அறிவிப்போம்.

அத்துடன், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையில் ஸ்தாபிக்கப்படும் பரந்துபட்ட அரசியல் கூட்டணி ஊடாகவே ஜனாதிபதி வேட்பாளர் தெரிவு செய்யப்படுவார்.

சகல அரசியல் கட்சிகளையும் ஒன்றிணைத்து பலமான அரசியல் கூட்டணியை ஸ்தாபிப்போம் இவ்வாறு பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார். (ம-7)

# ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் விற்பனை செய்ய நடவடிக்கை

## அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா

(கொழும்பு)

ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனத்தை விற்பனை செய்வதற்கான ஏலங்கள் நேரடியாக நடத்தப்படவுள்ளதாக துறைமுகங்கள், கப்பல் மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா அறிவித்துள்ளார்.

குறித்த தகவலை நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டிருந்த போதே அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதன்படி, எதிர்வரும் மார்ச் மாதம் 5 ஆம் திகதி விற்பனை செய்வதற்கான ஏலங்கள் நேரடியாக நடத்தப்பட்டு முதலீட்டாளர் தெரிவு செய்யப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், நாங்கள் ஏலங்களை அழைத்துள்ளோம், மார்ச் 5 ஆம் திகதி காலை 10.00 மணி முதல் மதியம் 2.00 மணி வரை இதற்கான விலை மனுக்களை தாக்கல் செய்யலாம்.

இது நேரலையில் செய்யப்படும். மதியம் 2.00 மணிக்கு விலை மனுக்கள் மதிப்பீடு செய்யப்படும் அதை ஆதரிக்க ஒரு தொழில்நுட்பக் குழுவும் உள்ளது. அவர்கள் விலைமனுக்களை மதிப்பீடு செய்வார்கள்.

இறுதியாக, அது அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும். குறைந்தபட்சம் 500 மில்லியன் அமெரிக்க டொலர்களை முதலீடு செய்வதற்கான வலுவான முதலீட்டாளர் வர வேண்டும்.

அத்துடன் விமான நிறுவனத்தின் 6,000 பணியாளர்களின் வேலைகளை பாதுகாப்பதும் அவசியம் என்றார். (ம-7)

# கெஹெலிய ரம்புக்வெல்ல

## அடிப்படை உரிமை மனு தாக்கல்

(கொழும்பு)

குற்றப் புலனாய்வு திணைக்களத்தினரால் எந்தவித உரிய காரணமும் இன்றி தாம் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டமையின் ஊடாக தமது அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாக உத்தரவிடக் கோரி முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல உயர்நீதிமன்றில் அடிப்படை உரிமை மனுவை தாக்கல் செய்துள்ளார்.

தமது சட்டத்தரணியின் ஊடாக அவர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

இந்த மனுவின் பிரதிவாதிகளாக பொலிஸ்மா அதிபர், குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் பணிப்பாளர் உள்ளிட்ட தரப்பினர் பெயரிடப்பட்டுள்ளனர்.

அதேநேரம் பிரதிவாதிகளிடம் இருந்து தமக்கு 100 மில்லியன் ரூபாய் நட்டஈடு தொகையை பெற்று தருமாறும் முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தமது மனுவின் ஊடாக கோரியுள்ளார். (ம-7)

# டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி அதிகரிப்பு

(கொழும்பு)

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி தொடர்ந்து அதிகரிப்பை பதிவு செய்து வருகிறது.

இந்த நிலையில் அமெரிக்க டொலரொன்றின் கொள்முதல் பெறுமதியானது நேற்று 305.16 ரூபாவாக பதிவாகியுள்ளது.

இலங்கை மத்திய வங்கி நேற்று வெளியிட்டுள்ள நாணய மாற்று விகிதங்களின் படி குறித்த பெறுமதி பதிவாகியுள்ளது.

அதன்படி அமெரிக்க டொலரின் விற்பனை பெறுமதி 314.87 சதமாகவும் பதிவாகியுள்ளது.

நேற்று முன்தினம் டொலரின் கொள்முதல் பெறுமதி 305.56 சதமாகவும், விற்பனை பெறுமதி 315.29 சதமாகவும் பதிவாகியிருந்தது. இதற்கமைய அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி நாளாந்தம் அதிகரித்து வருகின்றது.

இம்மாத ஆரம்பத்தில் அமெரிக்க டொலரின் கொள்முதல் பெறுமதி 310.54 சதமாகவும் விற்பனை பெறுமதி 320.40 சதமாக்வும் பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

# சுமந்திரனின் மனு நீதிமன்றால் நிராகரிப்பு

(கொழும்பு)

நிகழ்நிலை காப்புச் சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட விதம் சட்டத்துக்கு முரணானது என தீர்ப்பளிக்குமாறு ஜனாதிபதி சட்டத்தரணி எம்.சுமந்திரன் சமர்ப்பித்த அடிப்படை உரிமை மனுவை விசாரணை செய்யாமலேயே நிராகரிக்க உயர் நீதிமன்றம் நேற்று வியாழக்கிழமை தீர்மானித்துள்ளது.

பிரியந்த ஜயவர்தன, [illegible] றும் அச்சல வெங்கப்புலி ஆகிய மூவரடங்கிய உயர் நீதிமன்ற நீதிபதிகளாலேயே இந்த மனு நிராகரிக்கப்பட்டுள்ளது.

உயர் நீதிமன்றம் முன்வைத்த திருத்தங்கள் இதில் இடம்பெறாத காரணத்தினால் சட்டபூர்வமாக சட்டமூலம் நிறைவேற்றப்படவில்லை என தீர்ப்பு வழங்குமாறு கோரி பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் இந்த மனுவை சமர்ப்பித்திருந்தார். (ம-7)

# தென் மாகாணத்தில் இன்று துக்க தினம்

(கொழும்பு)

மறைந்த முன்னாள் நிதியமைச்சர் ரொனி டி மெல்இன் இறுதிக்கிரியைகளை முன்னிட்டு இன்று தென் மாகாணத்தில் துக்க தினம் அனுஷ்டிக்கப்படும் என தென் மாகாண ஆளுநர் வில்லி கமகே தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் தென் மாகாணத்தில் அமைந்துள்ள அனைத்து அரச நிறுவனங்களிலும் இன்று தேசிய கொடியை அரைக் கம்பத்தில் பறக்கவிடுமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகத் தாய்மொழிகள் தினம் பெப்ரவரி 21 ஆம் திகதி



கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

13

எழுத்து என்பது ஒரு மொழியின் அடிப்படை கூறுஆகும். மொழிக்கு நிலைபேறு அளிப்பது எழுத்தாகும். ஒலி வடிவத்திற்கு வரிவடிவம் கொடுப்பது எழுத்து என்பர். எழுதப்படுவதனால் எழுத்து எனப் பெயர் பெற்றது. தமிழ்மொழி என்பது செம்மொழியாகவும் பண்டை காலம் தொட்டே சிறந்த இலக்கண, இலக்கியங்கள் பெற்ற மொழியாகவும் உள்ளது. அவ்வாறான தமிழ் எழுத்துக்கள் படிப்படியாக சில மாறுதல்களைப் பெற்றே இன்றைய எழுத்து மொழியாக உருவம் பெற்றிருக்கின்றன. 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழ் எழுத்துக்கள் இந்தியாவிலுள்ள குற்றாலம் தொல்லியல் அருங்காட்சியகத்தில் உள்ளது.

தமிழ் எழுத்தின் கதை அல்லது வரலாறு பற்றி கந்தையா தில்லை விநாயகலிங்கம் என்பவர் ttamil.com இணையத்தில் பின்வருமாறு சுருக்கமாக கூறுகிறார். "தமிழ்மொழியானது மிகமிகப் பழைமையான, தொன்மை வாய்ந்த மொழியாகும். இத்தமிழ் மொழிக்கு வரிவடிவம் அதாவது எழுத்து உருவம் என்று உருவானது? என்ற வினாவிற்குச் சரியான விடை இன்றுவரை கிடைக்கவில்லை. தற்சமயம் நமக்குக் கிட்டியுள்ள ஆதாரங்களைக் கொண்டு சில மொழி வழி உண்மையை உணர்கிறோம்.

இதன்படி சிந்துவெளி எழுத்தில் இருந்து அநேகமாக தமிழி அல்லது தமிழ்-பிராமி ஏற்பட்டு இருக்கலாம் என்றும் பின் பிராமி எழுத்துக்களை ஓலைச் சுவடிகளில் எழுதுவதற்கிணங்க அதை மாற்றியதால், கி.பி.3 ஆம் நூற்றாண்டிலிருந்து வட்டெழுத்தானது தமிழ்ப் பிராமியிலிருந்து பிரியத் தொடங்கி, அது நாளடைவில் சிறுகச் சிறுக வளர்ந்து கி.பி. 6 ஆம் நூற்றாண்டில் தனித் தன்மை பெற்று, வட்டெழுத்து தோன்றியது எனப் பொதுவாக கருதப்படுகின்றது.

இங்கு, வளைந்த கோடுகள் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டதால் அம்முறைக்கு வட்டெழுத்து எனப் பெயர் பெற்றது. பிராமி எழுத்துக்கள் கோடுகளாக இருப்பதால், கோடுகளை ஓலைச் சுவடியில் எழுதினால் அவை கிழிந்து விடும் என்பதால் இந்த மாற்றம் ஏற்பட்டிருக்கலாம் என நாம் கருதலாம்.

இது கி.பி மூன்றாம் நூற்றாண்டிலிருத்து கி.பி பத்தாம் நூற்றாண்டு வரை தமிழை எழுத பயன்படுத்தப்பட்டு வந்த ஓர் எழுத்து முறையாகும். வட்டெழுத்தை மலையாள மொழியினை எழுதவும் பயன்படுத்தினர். கி.பி 8 ஆம் நூற்றாண்டுகளில் வட்டெழுத்து கிரந்த எழுத்துக்களுடன் மணிப் பிரவாளத்தை எழுத பயன்படுத்தப்பட்டது. சமஸ்கிருதமும் திராவிட மொழியொன்றும் கலந்து எழுதப்பட்ட ஒரு இலக்கிய நடையைக் மணிப்பிரவாளம் என பொதுவாகக் குறிப்பர்.

மேலும் வட்டெழுத்துக்களின் ஆரம்ப நிலைகளைத் தெரிந்து கொள்வதற்கு, நடுகற்களே சரியான சாட்சிகள் ஆகும் என அறிஞர்கள் கூறுகிறார்கள். கி.பி 11 ஆம் நூற்றாண்டுகளில் வட்டெழுத்து தமிழ் நாட்டில் வழக்கொழிந்து, தற்கால தமிழ் எழுத்துக்களை ஒத்த எழுத்து முறை பயன்படுத்த தொடங்கப்பட்டது. ஆனால் கேரளத்தில் 15 ஆம் நூற்றாண்டு வரை வட்டெழுத்து மலையாளத்தை எழுத பயன்படுத்தப்பட்டது. இவையை தவிர, இன்னும் இரண்டு எழுத்து முறைகள் பண்டைய தமிழ் இலக்கியத்தில் காணப்படுகின்றன. அவை கண்ணெழுத்து, கோலெழுத்து என்பனவாகும்.

வட்டெழுத்திற்கும் கோலெழுத்திற்கும் இடையே பாரிய வேறுபாடு இல்லை. ஆயினும் பிரதேசத்திற்குப் பிரதேசம் இதில் வேறுபாடுகள் காணப்பட்டன. வட்டவடிவில் அமைந்த கோடுகளைத் தன்னுள் கொண்டு அமைந்தவை வட்டெழுத்துகள் என்றும் இதற்கு சற்று மாறுபட்டதாக, எழுத்துகள் நீள்வடிவில் அமைவது கோலெழுத்து ஆகும். கோலால் எழுதப்படும் எழுத்து கோலெழுத்து என பொதுவாக விளக்கப்படுகிறது. கோலெழுத்து என்றால் அரச ஆணைகள் எழுதப்படும் எழுத்து என்றும் ஒரு விளக்கம் உண்டு. கோல் - செங்கோல். எனவே அரசனைக் குறிக்கும் என கருதலாம்.

பழங்கால தமிழகத்தில் ஏற்றுமதியாளர்கள் பண்டப் பொதிகளின் மீது சரக்கின் பெயரையும் அளவையும் படமாக வரைந்தனுப்பிய செய்தி சிலப்பதிகாரத்தில் உள்ளது. இவ்வாறு அடையாளம் காட்டி எழுதப்படுவது கண்ணெழுத்து எனப்படுகிறது. உதாரணமாக, "வம்பமாக்கள் தம் பெயர் பொறித்த கண்ணெழுத்துப் படுத்த எண்ணுப் பல்பொதிக்கடை முகவாயில்.." என்றும் "கண்ணெழுத்தாளர் காவல் வேந்தன் மண்ணுடை முடங்கலம் மன்னவர்க் களித் தாங்கு" என்றும் சிலப்பதிகாரம் கூறுகிறது.

இன்றும் நாம் பிரயாணம் செய்யும் பொழுது பெட்டிகள் மாறாமல் இருக்க எமது பெயரும் முகவரியும் அல்லது ஏதாவது அடையாளம் போடுகிறோம் அல்லவா, அதே போல ஒன்றே கண்ணெழுத்து ஆகும். மேலும் கோலெழுத்து என்பது தென்இந்தியாவில் காணப்பட்ட பண்டைய எழுத்து முறையாகும். இது தமிழ், மலையாளம் ஆகிய மொழிகளில் பாவிக்கப்பட்டது.

இது மலையாளத்தில் மிகச் சமீப காலத்திலும், அதாவது கிட்டத்தட்ட கி. பி. 17 ஆம் நூற்றாண்டு வரையிலும் பயன்பாட்டில் இருந்துள்ளது. தற்போதும் இதன் குறிப்பிடத்தக்க பாவனை அங்குள்ளது. இன்னுமொரு கருத்து, "கோடு எழுத்துக்கள்" கொண்டவை கோலெழுத்து என விளக்குகிறது. திருக்குறளில்,

"எழுதும் கால்கோல் காணாக்
கண்ணேபோல் கொண்கன் பழி
காணேன் கண்ட இடத்து"
-குறள் 1285

இக்குறளில், மைதீட்டும் நேரத்தில் தீட்டும் கோலைக் காணாத கண்களைப்போல் என்ற வரி எழுதுகோலை சுட்டிக்காட்டுகிறது. இவ்விரண்டு எழுத்து முறையிலும் எந்த அடிப்படை மாற்றமும் இல்லை. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இருந்தே தமிழன் எழுத்து கோல் கொண்டு எழுதினான் என்பதற்கும் இது சான்றாகிறது. இன்றும் பேனாவை எழுத்து கோல் என்றே அழைக்கின்றோம். இவ்வாறு அவர் தன் கட்டுரையில் கூறியுள்ளார்.

### எழுத்துகளின் வளர்ச்சி நிலைகள்

எழுத்துகளின் வளர்ச்சியை, சித்திரவெழுத்து, தன்மையெழுத்து, உணர்வெழுத்து, ஒலியெழுத்து என நான்காகக் கொள்ளலாம். இதனை நன்னூல், எழுத்தியல் ஈற்றுச் சூத்திர உரையில் மயிலை நாதர் என்னும் உரையாசிரியர் விளக்கமாகக் கூறியுள்ளார்.

### உருவெழுத்து

உருவெழுத்து (சித்திர எழுத்து முறை) சிந்து வெளித் திராவிடரிடம் இருந்தது. இவற்றைப் பழைய எகிப்தியரும் பாபிலோனியரும் வழங்கினர் என்று கூறப்படுகிறது. காது என்கிற சொல்லை எழுதாமல் காதின் உருவத்தை வரைவது போலும் மரம், சூரியன் இச்சொற், களை எழுதுவதற்குப் பதில் அவற்றின் உருவத்தை வரைந்து விடுவது போலும் அமைந்தவை உருவ எழுத்துகளாகும்.

உலக வரலாற்றிலேயே மொழி வளர்ப்பதற்காக அரசன் முன்னிலையில் சங்கம் நிறுவிய வரலாறு தமிழுக்கு மட்டுமே உண்டு. முதலில் தென்மதுரையில் தமிழ்ச் சங்கம் தோற்றுவித்தவன் பாண்டியன் காய்சினவழுதி. இந்த முதல் தமிழ் சங்கத்தில் கையால் எழுதாமல் வாய் மொழியாகவே இலக்கியம் வளர்த்து இருக்க வேண்டும். எனினும் சிலவற்றை மறவாமல் குறித்து வைக்கும் சூழல் வந்ததால் ஓவியமாக எழுதப்படும் ஒரு விழுதை முதல் தமிழ்ச் சங்கப் புலவர்கள் உருவாக்கிக் கொடுத்தனர்.

அந்த ஒரு எழுத்துக்களில் சில இரண்டாம் தமிழ் சங்ககாலத்திலும் பின்பற்றப்பட்டன. கடல் கொண்ட குமரி நாட்டு மக்களிடம் இருந்து பிரிந்த சீன மக்கள் இந்த ஒரு எழுத்து முறையை கொண்டு போயிருக்கலாம். சிந்துவெளியில் உள்ள எழுத்துக்கள் சில சீன நாட்டுபடை எழுத்துக்களை ஓரளவு ஒத்திருக்கின்றன. இக்காலத்தில் அவற்றின் ஒலிப்பு முறை வேறாக இருந்தாலும் தோன்றிய காலத்தில் ஒலிப்பு முறை ஒன்றாக இருந்திருக்க கூடும். உலக மொழிகளில் எழுத்துக்கள் தொடக்கத்தில் எழுத்து எனும் ஓவிய எழுத்தாக இருந்த பின்னர் தனி எழுத்தான வரலாறு தெரிகிறது.

### உணர்வெழுத்து

உணர் வெழுத்து (குறியினாலுணரப்படும் ஒருவகை எழுத்து) என்பவை சீனர்களின் பண்டைய எழுத்து முறையாகும். நாம் நமக்கு மட்டுமே பார்க்கவும் புரிந்து கொள்ளவும் அமைத்துக் கொள்ளும் ஒரு சில குறியீடுகளின் பொருள் நமக்குப் புரியலாம். அதே நேரம் அதை மற்றவர் உணர முடியாது போனால் அது உணர்வெழுத்து ஆகாது.

### தன்மைஎழுத்து

தன்மைஎழுத்து என்பது, எழுத்துகளை உச்சரிக்கும் போது இருக்கும், வன்மை, மென்மை போன்ற தன்மைகளும் அவை சேர்ந்து சொல்லாகும் போது ஏற்படும் தன்மைகளையும் குறிக்கும். தன்மையெழுத்து எகிப்தியர்களிடம் காணப்பட்டதாகும். அவர்கள் அறிவு நுட்பத்திற்கு கண்ணும் எறும்பும் அறிவின்மைக்கு ஈயும் நன்றியின்மைக்கு விரியன் பாம்பும் வெற்றிக்குக் கருடனும் போன்றவற்றை பாவித்தனர்.

### ஒலியெழுத்து

ஒலியெழுத்து என்பது ஒலிக்கு வடிவம் தந்து எழுதப்படுவது. அதாவது ஒலி எழுத்து என்பது எழுதப்பட்ட குறியீடுகளுக்கு உரிய ஒலியை மீண்டும் உச்சரிக்கத் தோன்றுவது. (தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாந்தனுக்கு...

முன்னாள் இந்திய பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை அனுபவித்த நிலையில் விடுதலை செய்யப்பட்டு உடல் நலக்குறைவால் இந்தியாவில் உயிரிழந்த சாந்தனின் உடலுக்கு பேரறிவாளனின் தாயார் அற்புதம்மாள் அஞ்சலி செலுத்தியுள்ளார்.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சாந்தனுடன் இணைந்து தண்டனை பெற்று விடுதலை செய்யப்பட்டவர்களுள் பேரறிவாளனும் ஒருவராவார்.

குறித்த வழக்கில் இருந்து பேரறிவாளன் விடுதலையானதில் பாரிய பங்கு அவரது தாயார் அற்புதம்மாளுக்கு உண்டு. பேரறிவாளனின் விடுதலைக்காக அவருடைய தாயார் அற்புதம்மாள் பல்வேறு போராட்டங்களை மேற்கொண்டிருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது. (ம-7)

## சாந்தனின்...

சர்வதேச விமான நிலையத்திலிருந்து எடுத்துவரப்பட்டு, காலை 7 மணிக்கு கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடையும் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனிடையே சாந்தனின் இறுதி கிரியைகள் குறித்து இதுவரை தகவல் வெளியாகவில்லை.

இதேவேளை தாயகத்தில் சாந்தனின் பூவுடலுக்கு உணர்வுபூர்வமாக அஞ்சலி செலுத்த மக்கள் தயாராகி வருகின்றனர். (ம-7)

## ரயில் மோதியதில்...

புகையிரதம் மோதியதிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதனையடுத்து, மரணமடைந்த பெண்ணின் சடலம் மாங்குளம் புகையிரத நிலையத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு ஒப்படைக்கப்பட்டதுடன், அங்கிருந்து மாங்குளம் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

சம்பவத்தில் 45 தொடக்கம் 55 வயது மதிக்கத்தக்க பெண்ணே மரணமடைந்தவராவார். மரணமடைந்தவர் இதுவரை அடையாளம் காணப்படவில்லை.

புளியங்குளம் பொலிஸார் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7,250)

## எனது தாயின்...

மாறும் வினயமுடன் கோரிக்கை விடுத்துள்ளார்.

தாயாரைத் தனிமைப்படுத்தி வைத்திருப்பதாகவும், தாயார் அதிர்ச்சி கொள்வதை தவிர்க்கும் வகையில் மரண செய்தியினை அறிவிக்க வேண்டும். இறுதியாக இந்த ஒன்றரை வருடமாகப் போராடியும் அண்ணனை மீட்க முடியவில்லை என்றும் வேதனை வெளியிட்டுள்ளார். (ம-7)

## தனியார்...

வுள்ளதாக தனியார் பஸ் உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து தூர சேவைகளில் ஈடுபடும் தனியார் பஸ் உரிமையாளர்களின் கோரிக்கைக்கு அமைய, உரிய தீர்வுகளை பெற்றுக் கொடுப்பதற்கான குழு இன்று நியமிக்கப்படும் என வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவித்தார்.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் மற்றும் தனியார் பஸ் உரிமையாள்ர்கள் சங்கத்தினருடன் நேற்று மாலை நடைபெற்ற கூட்டத்தின் போதே இந்தத் தீர்மானத்தை ஆளுநர் அறிவித்தார்.

வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் இந்த விசேட கலந்துரையாடல் நடைபெற்றது.

யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டுள்ள புதிய பஸ் நிலையத்திலிருந்து தனியார் மற்றும் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ்கள் தூர சேவையை ஆரம்பிக்க வேண்டும் என கோரி நேற்று முற்பகல் யாழ் நகரில் ஆர்ப்பாட்டம் வலுப்பெற்றது.

சம்பவ இடத்திற்கு விரைந்த ஆளுநர், தனியார் பஸ் உரிமையாளர்களின் கோரிக்கை தொடர்பில் மாலை விசேட கலந்துரையாடலை நடத்தி தீர்வு பெற்றுத்தருவதாக கூறினார்.

அதற்கமைய, நேற்று மாலை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் ஆகியோருடன் கலந்துரையாடி இந்த பிரச்சினைக்கான தீர்வை பெற்றுக் கொடுக்கும் நோக்குடன் குழு ஒன்றை நிய...

இந்த தீர்மானத்தை தனியார் பஸ் உரிமையாளர்களுக்கும் அறிவித்ததுடன், நாளைய தினமே (இன்று) குழுவை நியமித்து தேவையான நடவடிக்கைகளை ஆரம்பிப்பதாகவும் கூறினார்.

ஆளுநரின் பணிப்புரைக்கு அமைய குறுகிய காலத்திற்குள் தங்களின் கோரிக்கைக்கான தீர்வை எதிர்பார்ப்பதாக யாழ்ப்பாணத்திலிருந்து தூர சேவைகளில் ஈடுபடும் தனியார் பஸ்களின் உரிமையாளர்கள் சங்கத்தினர் தெரிவித்தனர்.

அதற்கமைய, பணிபகிஷ்கரிப்பை கைவிட்டு நாளை முதல் வழமையான சேவைகளை முன் னெடுக்க உள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (ம-7)

# பொருளாதாரம் சிறைப்பட்டுள்ளது

## அநுர குமார



"எமது நாட்டின் வரி விதிப்பின் மூலம் எமது பொருளாதாரம் சிறைப்படுத்தப்பட்டுள்ளதால், எமது பொருளாதாரம் விரிவடையவில்லை" என தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அநுர குமார திசநாயக்க தெரிவித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தியின் வங்கி மற்றும் நிதிசார் ஒன்றியத்தின் கொழும்பு மாவட்ட மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், "தளர்வான ஒரு வரிக் கொள்கையே எமக்குத் தேவை.எமது மத்திய வங்கி ஆளுநர் பொருளாதாரத்தை சுருக்கி வைத்துள்ளதுடன், வட்டி வீதத்தை அதிகரித்தல், பாரியளவில் வரி விதித்தல், இறக்குமதியைக் கட்டுப்படுத்துதல் ஆகிய செயற்பாடுகளால் பொருளாதாரத்தைச் சுருக்கியுள்ளார்.

எமது திட்டம் பொருளாதாரத்தை விரிவாக்குவதாகும். பொருளாதாரம் வளர்ச்சியடைய வேண்டும்.

அத்துடன், தம்மிடம் இருக்கின்ற கொழும்பினை மையப்படுத்திய பொருளாதாரத்தினை கிராமிய மக்களுக்கு விரிவுபடுத்த வேண்டும். அத்துடன் புதிய பொருளாதார தோற்றுவாய்களை கிராமத்திற்கு எடுத்துச்செல்ல வேண்டும்" இவ்வாறு அநுரகுமார திசாநாயக்க குறிப்பிட்டார். (ம-7)

## தீ...

சிவாஜிலிங்கம் விடுவிக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று வழங்கிய உத்தரவின் கீழ் இவர் விடுவிக்கப்பட்டுள்ளார். குறித்த வழக்கானது பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கு தொடர்பான சமர்ப்பணங்களை முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் சார்பில் நீதிமன்றில் முன்னிலையான சட்டத்தரணி கடந்த 24ஆம் திகதி முன்வைத்திருந்தார்.

இந்நிலையில், சமர்ப்பணங்களை ஆராய்ந்த கொழும்பு மேல் நீதிமன்றம் குறித்த வழக்கில் இருந்து முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கத்தை விடுவித்துத் தீர்ப்பளித்துள்ளது. (ம-7)


லக்கி 7 VIP
திகதி 2024.02.29
சீட்டிழுப்பு இலக்கம் 0231
C 7 6 8 9 2 6 C
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2024.02.29
சீட்டிழுப்பு இலக்கம் - 1435
P 13 55 68 74 P
Double Chance 01711

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3647
சீட்டிழுப்பு திகதி 29.02.2024
J 26 41 54 66
J 40611
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.02.29
சீட்டிழுப்பு இலக்கம் 0714
தனுசு 31 32 37 51 தனுசு
24721 13

மஹஜன சம்பத
திகதி 2024/02/29
சீட்டிழுப்பு இலக்கம் 5405
Y 9 8 0 0 8 4
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 29/02/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1753
S 03 04 23 43 60
Double Chance 52456

உத்தியோகபூர்வ முடிவுகள்
29.02.2024 வெற்றி வாரம் 113 வர்ணம் ஊதா
ஆங்கில எழுத்து P
மற்றும் வெற்றி இலக்கம் 3 0 3 9 7 4
L
30,117,752.00
DLB தொலை பேசி : 011-2 333 546-47 Web : www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2379 வர்ணம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2024.02.29 தினம் வியாழக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 33 38 40 58 H
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 75,447,700.80
DLB

சனிதா Shanida
திகதி 2024.02.29 வெற்றி வாரம் 4540 வர்ணம் சிவப்பு
வெற்றி இலக்கங்கள் 04 19 28 62 V
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.51,404,410.80
DLB
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

சீட்டிழுப்பு வாரம் 4091 வர்ணம் கபிலம்
சீட்டிழுப்பு திகதி 2024.02.29 தினம் வியாழக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 05 18 31 62 மகரம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.8,518,215.20
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
E 29 03 18 33 64
1555
29.02.2024 வியாழன்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 508,996,430.20
DLB தொலை பேசி : 011-2 333 546-47
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வியாழக்கிழமை
வெற்றி வாரம் : 2205
சீட்டிழுப்பு திகதி : 2024.02.29
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.95,095,061.60
ADA KOTIPATHI
வெற்றி இலக்கங்கள் 16 18 33 76 H
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

மானிப்பாய் வீதி, ஐந்து சந்தி,
பள்ளிவாசல் அருகாமையில் KBC
ரெஸ்ட்ரோரண்ட்
முன்னால் 2 3/4 பரப்பு
(19311)

**077 670 5689**



## விற்பனைக்கு

**Restaurant ஒன்றிற்கு தேவையான தளபாடங்கள்/உபகரணங்கள் விற்பனைக்கு உண்டு.**

- Large Upright Chillers
- Food Chiller
- Salad Dispenser
- Large Fridge
- Bottle Cooler
- Deep Fryers
- Cookers
- Table
- Grinder
- Deep Freezers
- Large Gas Slinder
- Burger Plate With Cooker

(19263)

**077 653 3221**


### தாயின் கவனக்குறைவால்
# ஆட்டோவிலிருந்து விழுந்த ஒருமாத கைக்குழந்தை

(கொழும்பு)

தாயின் கையிலிருந்து தவறி விழுந்த நிலையில் ஒரு மாத குழந்தையொன்று பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ள சம்பவமொன்று பதிவாகியுள்ளது.

ஹட்டன் கொழும்பு பிரதான வீதியில் கிதுல்கல பிரதேசத்தில் குறித்த சம்பவம் நேற்று முன்தினம் இரவு 11.35 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

நீர்கொழும்பு பிரதேசத்தைச் சேர்ந்த இரண்டு குடும்பங்கள் இரண்டு முச்சக்கரவண்டிகளில் கதிர்காமம் ஊடாக நுவரெலியாவிற்கு சுற்றுலா சென்று மீண்டும் நீர்கொழும்பு நோக்கி திரும்பிக் கொண்டிருந்தபோது, கித்துல்கல குருமெடிய பிரதேசத்தில் அதில் ஒரு முச்சக்கரவண்டியில் இருந்த தாயின் கையில் இருந்த குழந்தை தவறி வீதியில் விழுந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பின்னர் அதே வீதியில் முச்சக்கரவண்டியை பின்தொடர்ந்து வந்த கார் ஒன்று, வீதியில் விழுந்து கிடந்த குழந்தையை கித்துல்கல பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் சென்று ஒப்படைத்ததுடன், பொலிசார் உடனடியாக குழந்தையை கித்துல்கல வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

பின்னர் குழந்தை இல்லாததை அறிந்த முச்சக்கரவண்டியில் பயணித்தவர்கள் திரும்பிச் சென்று வீதியில் தேடிய போது குழந்தை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டமை தெரியவந்துள்ளது.

இதனையடுத்து தாய் மற்றும் குழுவினர் கித்துல்கல வைத்தியசாலைக்கு சென்றுள்ள நிலையில், குழந்தையை தாயுடன் உடனடியாக கரவனெல்ல வைத்தியசாலைக்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குறித்த சந்தர்ப்பத்தில் தாய் தூங்கியிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

பின்னர் அங்கு மேற்கொள்ளப்பட்ட வைத்திய பரிசோதனைகளில் குழந்தை பத்திரமாக இருப்பதாக தெரியவந்துள்ளது.

(ம-7)

### ஜனாதிபதியைச் சந்தித்த
# பொலிஸ்மா அதிபர்

(கொழும்பு)



நாட்டின் 36 ஆவது பொலிஸ்மா அதிபராக கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்ட புதிய பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் நேற்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து கலந்துரையாடினார்.

புதிய பொலிஸ்மா அதிபருக்கு வாழ்த்துக் கூறிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அவருடன் சிநேகபூர்வமாக கலந்துரையாடினார்.

அதனையடுத்து புதிய பொலிஸ்மா அதிபர் சம்பிரதாயபூர்வமாக ஜனாதிபதிக்கு நினைவுச் சின்னமொன்றையும் வழங்கினார்.

இதேவேளை, பிரதமர் மற்றும் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் ஆகியோரையும் புதிய பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் நேற்று சந்தித்து கலந்துரையாடினார். (ம-7)


**பிரபல ஜோதிடர் குமாரசாமி**
**யாழ். விஜயம்**

திருமணத்தடை, மணவாழ்க்கையில் நிம்மதி இல்லையா? காதல், நோய், கல்வியில் மேன்மை இன்மை, தொழில் மேன்மை இன்மை அனைத்து விதமான பிரச்சினைகளுக்கும் முன் அனுமதி பெற்று வரவும்.

**077 877 8470**
இடம் : தெறேசா இன் (THERESA INN)
72, றக்கா வீதி, சுண்டுக்குளி
கீரிமலையிலும் சந்திக்கலாம்
(19312)



**மற்றுமொரு புதிய பஸ் சேவை ஆரம்பித்துள்ளனர்**

**Village Hotel Jaffna Express**

அச்சுவேலி → புன்னாலைக்கட்டுவன் →
உரும்பிராய் → திருநெல்வேலி →
யாழ்ப்பாணம் → கொழும்பு

கட்டணம் - 2700/=
(19118)

தொடர்புகளுக்கு
**077 544 8503**



## காணி விற்பனைக்கு

இராசபாதை வீதியில்
வீட்டுடன் கூடிய 2 பரப்புக்
காணி விற்பனைக்கு உண்டு.
(19306)

**077 986 5457**



**DCM - யாழ்நகர்**
(வேம்படி மகளிர் கல்லூரி அருகாமை)

**A/L 2025**
கலை, வர்த்தகம்
புதிய பிரிவு
02.03.2024 சனி - 8.00 மணி
(C-8442) – நிர்வாகம்



**விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி வசதிகள்**

சகல நாடுகளுக்குமான விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி (Show money) வசதிகள்

தொடர்புகளுக்கு :
(19242)
**074 17 37 684**



**V2 VISA SERVICES**
**கனடா**
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
**விமான பயணச்சீட்டுக்கள்**
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-8441)



**சாரதி தேவை**

வான், ஆட்டோ ஓடத்தெரிந்தவராகவும் அலுவலக வேலைகளுக்கு உதவுபவராகவும் இருக்க வேண்டும்.



சம்பளம்: 40'000/-



வயது: 21 முதல் 40 வரை
தொடர்புக்கு:-
**0777068777**
(C-8441)


## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 19 - 04 - 1958 | 15 - 02 - 2024 |

### செல்வி ஜெகதீஸ்வரி சின்னத்துரை (ஜெகா)

யாழ். உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி ஜெகதீஸ்வரி சின்னத்துரை அவர்கள் கடந்த 15.02.2024 (வியாழக்கிழமை) அன்று இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை-நல்லமுத்து தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும் தபேந்திரன் (லண்டன்), காலஞ்சென்ற தவமலர், காலஞ்சென்ற குலேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் கமலநாதன், சாந்தினிதேவி ஆகியோரின் மைத்துனியும் பரந்தாமனின் சித்தியும் கஜீபன், ஸ்டீபன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கடந்த (22.02.2024) புதன்கிழமை அன்று உரும்பிராய் இருளன் இந்துமயானத்தில் தகனம் செய்யப்பட்டது. தவிர்க்கமுடியாத காரணத்தினால் காலந்தாழ்த்தி அறிவிக்கப்பட்ட இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இந்துக்கல்லூரி வீதி,
உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்.

தகவல் :
சின்னத்துரை தபேந்திரன் (சகோதரன்)
077 041 5523
(19319)

## 6ஆம் ஆண்டு நினைவலைகள்...



அமரர். திருமதி
### தயாளன் ரூபாவதி (சாந்தி)
(திதி : 01.03.2024)
தோற்றம் : 18.02.1969 மறைவு : 07.03.2018

ஆண்டு ஆறு நகர்ந்தாலும்
நம்மை விட்டு அகலாது உங்கள் நினைவு
,நினைவுகள் வருகையில்
நிலைகுலைந்து போகின்றோம் அம்மா
உங்களை நினைக்காத நொடிகளில்லை
அன்பினால், பண்பினால், நட்பினால்,
ஆளுமையால் எங்கள் அனைவரது
உள்ளங்களில் குடியிருக்கும்
எம் அன்னையை நாம்
என்றென்றும் நினைத்திருப்போம்.

“ரூபமஹால்”
வல்லிபுரப்பரியாரியார் ஒழுங்கை,
பருத்தித்துறை.
தொலைபேசி : 077 652 9017

கரையும் கண்ணீரில்
நிறையும் நினைவுகளுடன்
கணவர் இ.தயாளன் மற்றும் பிள்ளைகள்
ராஜன் வீடியோ ஸ்ருடியோ
பருத்தித்துறை.
(C-8439)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.131, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.03.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org